திராவிடநாடு

6–11–60 | வாரவெளியீடு | விலை 16 காசு

அவள் கேட்ட விலை

[எழில் முதல்வன்]

அற்றைக் கொருநாள் மாலையிலே—நீர்
ஆடவந் தாள்பொன்னி நீர்த்துறைக்கே—தமிழ்
கற்றவர் நெய்யும் கவிதையைப்போல்—மிகக்
கவின்உற என்எதிர் வந்துநின்றாள்—நான்
சுற்றும் புறமும் நோக்கிவிட்டு—எண்ணம்
சொல்லத் தலைப்படும் நேரத்திலே—'இதழ்
ஒற்றடம்' தாவென்று கேட்டுவைத்தேன்—அவள்
"ஒப்புகிறேன்; ஓர் ஐயம் தீரும்"என்றாள்.

ஒன்றென்ன ஒன்பது சொல்லுகிறேன்—அடி
உன்னுடை ஐயம் என்னஎன்றேன்—அவள்
"என்று திராவிடம் நாம் அமைப்போம்—வடக்கு
எத்தர்களின் தலை நீக்கி"என்றாள்—நான்
"அன்னமே! கேள்நம் அமைச்சர்களோ—பிறரை
நம்பி வாழ்கிறார் கவலையின்றி—ஏனோ
இன்னமும் சூடு வரவேயில்லை—தமிழன்
என்னும் உணர்வோ தினையுமில்லை.

வாடை தருதிசை நோக்கிநின்று—பணிந்து
வாய்பொத்தி நிற்கின்றார் அமைச்சரெல்லாம்—அடி
ஓடைக் குளிர்மலர் பார்வையளே!—அவர்
உள்ளவரை டில்லி ஆட்சியினர்—பெண்ணே!
திராவிடம் தரப் போவதில்லை"—என்றேன்
பாங்கான கொள்கை விளக்கமென்று—பரிசாய்
ஆடையாய் ஆனாள்என் மெய்யினுக்கே—நானும்
அங்ஙனமே ஆயினேன் அத்தையலுக்கே!

இந்த நிலை மாறவேண்டுமானால்....!

(நீலமலையான்)

இன்று நம் தமிழகத்தில் எங்கு நோக்கினும் 'வேலையில்லை வேலையில்லை' என்ற பல்லவி கேட்ட வண்ணமாக இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்துப் பயங்கரப் பேயாட்டம் ஆடி வருவதைக் காணுகின்றோம். கற்றுத் தேறிய பல இளைஞர்கள் வேலையில்லாக் கொடுமைக்கு இலக்காகி வீதி வீதியாகப், பஞ்சைகளாய்ப் பராரிகளாய்த் திரிவதையும் — தங்கள் வேலைதேடு முயற்சி வீணானது குறித்து வாழ்க்கையில் கசப்பேறிப்போய்—தன் நம்பிக்கையிழந்து, உயிரை மாய்த்துக் கொண்டோரின்—மாய்த்துக் கொள்ள எத்தனிப்போரின் தொகை அன்றாடம் மேருவென வளர்ந்து கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். இந்த நிலை கண்டு உள்ளம் துடிக்கின்றோம்—மலைக்கின்றோம். அத்தகையவர்களின் முடிவு என்னவாகும் என்பதை நம்மால் ஊகிக்கவும் இயலாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கின்றது.

நாட்டில் நல்ல தொழிலாளர்கள், சிற்பிகள், ஓவியர் இன்னோரன்ன பலதிறப்பட்ட தொழிலாளப் பெருமக்கள் தொழிலின்றிக் கண்கலங்கி நிற்கும் காட்சி, காணக் கலக்கமே ஏற்படுகிறது.

தொழிலாளர்கள் — படித்தவர்கள், இவர்களிடையே இத்தகைய சூழ்நிலையை உண்டுபண்ணிப் பார்த்துக்கொண்டு வாளா இருக்கும் இந்தியப் பேரரசின் போக்கு இன்னும் எப்படியெப்படியாகி, முடிவு என்னவாகுமோ என்று ஏக்கத்தோடு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இதுபோன்ற அவல நிலை நம் இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் இருக்கின்றதா? என்று நோக்குமிடத்து இல்லையென்பதே விடையாகும். இந்த நிலை நம் தென்னகத்தில்தான் அதிகமாகப் பரவியிருப்பதைக் காணமுடியும். வடக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முன்னேறி வருவதையும் காணுகின்றோம்: இந்தியா என்பது ஒரே நாடு என்று ஏக இந்தியா பேசுவோரின் கண்களுக்கு ஏனோ இந்தப் பேதம் புரியாமலே இருந்து வருகின்றது! இதுபோன்ற பேதங்களைக் காணுகின்ற வேளையிலேதான் "தென்னகம் புறக்கணிக்கப்படுகின்றது;" "வடக்கு வளர்கின்றது, தெற்குத் தேய்கின்றது" என்று மக்கள் கண்டனத்தை எழுப்புகின்றனர். ஒரு கண்ணுக்கு வெண்ணெயும், ஒரு கண்ணுக்குச் சுண்ணும்பும் தடவப்படுவதைக் கண்டு சுண்ணும்பு தடவப்படும் மக்கள் உணர்ச்சிப் பெருக்கெடுத்துத் தங்களையே மறந்துவிடுகின்ற நிலை ஏற்படுகிறது. இந்த நிலை நீடித்துக் கொண்டேயிருப்பதால்தான் நாட்டைப் பிரிக்கவேண்டும் என்ற முடிவுக்கு மக்கள் வர நேர்ந்திருக்கிறது. இந்தப் புறக்கணிப்பு மேலும் மேலும் வளருமேயானால் நாட்டில் குழப்பங்களும்—கொந்தளிப்புகளும் ஏற்பட்டு ஆட்சியின் அச்சாணிக்கே ஆபத்து உண்டாக்கும் நிலை வந்தே தீரும்.

பண்டைத் தமிழகத்தின் தொழில் நிலையை—தொழிலாளர் நிலையை அறியும் ஒவ்வொரு தமிழனும் 'அத்தகைய நிலையில் இருந்த தமிழகமா இன்று ஆதரிப்பாரற்று—அயலானுக்கு அடிமைப்பட்டு அல்லலுறுகிறது' என்று கலங்காமலிருக்க இயலாது. இன்று மக்கள் நல்வாழ்வுக்காக எண்ணியெண்ணிக் குழிவிழுந்த கண்களிலே கண்ணீரைத் தேக்கி ஏக்கத்தோடு கிடக்கின்றனர்.

தொழிலும், படிப்பும் கற்று நிறைந்த நல்லவர்கள் வேலையில்லாத காரணத்தால், பசியின் கொடுமைக்கு ஆளாகி இரந்து வாழ்கின்ற நிலையினையுண்டாக்கிய அரசு, வேறெந்தநல்லதைச்செய்து விடமுடியும்?

ஓர் நல்ல தொழிலாளி வசதியின்றி, இரந்துதான் உயிர்வாழ வேண்டிய நிலையைக் காணுகின்றபோது, வள்ளுவரின் குறளொன்றே நினைவிற்கு வருகிறது.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

இரந்தும், பிச்சையெடுத்தும் வாழ வேண்டியிருந்தால், இந்த உலகத்தை இயற்றியவன் யாராயிருப்பினும் கெடுக, என உணர்ச்சியின் உச்சத்திலிருந்துகொண்டு வள்ளுவர் கூறியிருக்கிறார். இதனையே பாரதியும்,

"தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜெகத்தினை யழித்திடுவோம்"

என்று ஆவேசத்தோடு பாடியிருக்கிறார். இத்தனைக்கும் மேலாக, ஒரு நாட்டில் மக்கள் பசியாலும் பஞ்சத்தாலும் வாடி வதைவதற்குக் காரணம் அரசுதான் என்றும், அது அரசுக்கே பெரிய குற்றம் என்றும் ஆணித்திறமாக அறைந்திருக்கிறார்கள்.

இவ்வாறு வேலையின்றி மக்கள் கைநெரித்துக் கண் கலங்கும் நிலையைக் கண்ட கவிஞர் ஒருவர்,

"கைத்திறத்தில் இணையிலாத கல்விதந்த
தமிழர்நாம்
கைநெரிந்து வேலையின்றிக் கண்கலங்கி
நிற்பதோ!"

என வீரமுழக்கமிட்டிருக்கின்றார்.

இப்படியெல்லாம் அறிஞர்களும் கவிஞர்களும் அவ்வப்போது நாட்டு நடப்பினை எடுத்துக் கூறியும், அதற்கு, ஆவனசெய்யாது, அரசு அலட்சியமாக இருந்து வந்து கொண்டேதானிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமோ—பட்டினிப் பட்டாளங்களோ தமிழகத்தின் எத்திக்கு நோக்கினும் அங்கெல்லாம் வளர்ந்து வருவதைத்தான் காணமுடிகிறது.

இந்த வேலையில்லா அவலநிலை, என்று முதல் நம்மிடையே உருவாகியது என்று நோக்குமிடத்து, ஆங்கிலேயர் ஆட்சியின்போது வித்திட்டு—உரமிட்டு — வளர்ந்து, இன்று இலைவிட்டு, விழுது படர்ந்து, இந்த நாட்டையே — குறிப்பாகத், தமிழ்கூறு நல்லுலகையே ஆக்கிரமித்துக்கொண்டது.

இந்த ஆக்கிரமிப்பு என்றுதான் அகலுமோ தெரியாது. இதற்காகத் துரைத்தனம், ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டுப் பாலைவனங்களாகக்கிடந்த பலவடநாட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (6—11—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 17

சாதி ஒழிந்தால்......!

'சாதியை ஒழித்துவிட்டோம்; இந்த நாட்டில் அதற்கு இனி இடம் இல்லை; அதைக் குழிதோண்டிப் புதைத்தாகிவிட்டது' என்று சொல்லுகின்றவர்கள் உள்ளனர்; நம்புகின்றவர்களும் உள்ளனர். அது உண்மையான கூற்றுத்தானா என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மேற்போக்காகப் பார்க்கின்றபோது சாதி இல்லையோ என்று எண்ணத் தோன்றும்; சாதிச் சனியனை ஒழித்துவிட்டதாக எண்ணி மகிழலாம். ஆனால் அந்தச் 'சனியன்' அவ்வளவு எளிதில் போகக்காணோம். அதன் ஆட்சி இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. வீட்டில், உள் அறையில் இருந்த சாதி, இப்போது உள் அறையைவிட்டு, வீட்டைக் கடந்து வெளிவந்து உலவத் தொடங்கிவிட்டது. 'என்ன சாதி?' என்று ஒருவனைப்பார்த்துக் கேட்கத் தயக்கம் நீங்கி வெளிப்படையாகக் கேட்டு அறியத் துடிக்கும் துணிவு காணப்படுகின்றது. நம் சாதி என்று சிலபேர்மீது ஆசையும் பற்றும் வளரும் நிலை ஏற்படுகின்றது. நம்மவன் அல்லன் என்பதால் சிலபேரைப் புறக்கணிக்கவும் மனம் எண்ணுகின்றது. இந்த நிலை நாட்டினை எங்கு கொண்டுபோய் நிறுத்தும் என்பதை அளவிட்டுக் கூற இயலாது. சொல்லொணாத் துயரங்கள், தொல்லைகள் சாதியால் விளைந்துள்ளன. நமது நாடு உண்மையான உயர்வைக் காணவேண்டுமாயின், முதலாவதாகவும் முக்கியமாகவும் செய்யப்படவேண்டிய மாற்றமும் திருத்தமும் சாதி ஒழிப்புத்தான் என்பதை நமது இலட்சியமாகக் கொண்டுள்ளோம். சாதியற்ற சமுதாயத்திலேதான்—உண்மையான சமத்துவம் என்ற அடித்தளத்தின் மீதுதான் சமதர்மம் அல்லது பொதுவுடைமை என்ற பூங்கா ஏற்படும். எனவே, சாதி ஒழிப்பு எத்துணை முக்கியமானது என்பது விளங்கும்.

ஆனால், நம்முடைய நாட்டில் பலருக்கு இந்த நிலை தெரியாததினால் சாதியைப்பற்றி அதிகமான அக்கறை காட்டாமல் விட்டுவிட்டு, அது தானாக ஒழியும் என்று எண்ணினர். அது அப்படி ஒழியவில்லை. சட்டம் என்ற தடிகொண்டு அடித்தபோதும் அது ஒழியவில்லை.

சாதியின் முற்றிய நிலையில் உள்ள நோயே தீண்டாமை என்பது. சாதிபோய்விட்டது என்று தவறாக எண்ணுவதைப்போலவே தீண்டாமையும் ஒழிந்துவிட்டது என்று பலர் பேசினர். ஆனால் உண்மைநிலை அது ஒழியவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. ஆதி—திராவிடர் என்ற பெயர் மாறி, அரிசனம் என்ற பெயர் கிடைத்ததேயன்றிப், பெருமை ஒன்றும் கிட்டவில்லை. அதே சேரி, அதே ஏழ்மை, அதே புறக்கணிப்பு, அதே இழிநிலைதான் இன்னும், இருந்திடுகிறது. இதனை எண்ணி எண்ணி மனம் புழுங்கி அமைச்சர் சகசிவன்ராம் அவர்கள் வருந்தினர்; வருத்தத்தைச் சிலவிடங்களில் சொல்லியழுதார். உடனே பலர்—குறிப்பாகத் தேசிய ஏடுகள்—அவர் மீது பாய்ந்துவிழுந்தன. அந்தப் பாய்ச்சலினால் உள்ளதை மறைத்துவிட இயலாது அல்லவா?

அதேபோல் சாதி ஒழிந்துவிட்டது, என்று பறைசாற்ற முனைவோர்க்கும் ஒரு அடி அண்மையில் கிடைத்திருக்கிறது.

> "ஜாதி முறை ஒழிந்தாலொழிய, சோஷலிசம் வரமுடியாது...நாம் ஜாதிவலையில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். ஜாதி அரசியலிலும் புகுந்துவிட்டிருக்கிறது"

என்று நேருபண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார். ஒழிந்துவிட்ட சாதி இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை நிலை. சாதி இந்த நாட்டைவிட்டு அகலவில்லை. அதற்காக உண்மையான முயற்சிகள் செய்யப்பட்டால் நிச்சயம் அது ஒழியும். இந்தப் பிரச்சினையில் அடிப்படையை ஆராய்ந்து முனைகின்றவர்கள் தொகை வளர வளர—கழகத்தின் இலட்சியங்களில் ஒன்றான சாதி ஒழிப்பு முறை உண்மையானதுதான் என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்படும்போது தானாகவே—சாதி ஒழியும். ஆனால் அதுவரை ஒளியும்; பதுங்கும்.

சாதி ஒழிந்தால் சோஷலிசம் மட்டுமா வரும்? எத்தனையோ எண்ணற்ற நன்மைகளை நாம் பெற முடியும். எனவே ஒளிந்துள்ள சாதியை ஒழிப்போமாக!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

நிலத்தையெல்லாம் பாங்கான சோலைவனங்களாக்கி வருகின்றது. எங்களுக்கு எங்கே திட்டம் என்றால், தமிழகத்தை வளைத்துக் கிடக்கும் நெடுங்கடலைக் காட்டி 'அதற்குள்ளேயிருக்கிறது திட்டம்' என்று சொல்லுகின்றது.

தமிழரின் பிணங்கள், கடலலையால் மோதப்பட்டு மோதப்பட்டு, சிங்களத்தீவின் கரையிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பிணங்கள், சுறு தின்றதுபோக, சுழல் அரித்ததுபோக, மிச்சமிருந்தவை சிங்களத்தீவின் கரையோரம் கிடந்தன. இத்தனைக்கும் காரணம், தமிழகத்திலே தமிழன் வாழ வக்கில்லை — வழியில்லை என்பதைத் தவிர வேறென்ன?

சிங்களத்தீவின் கரைகளையும் காடுகளையும் அழகு செய்த தமிழர் இன்று பிணநாற்றம் செய்து கொண்டிருக்கும் நிலைக்குத் துரத்தப்பட்டுள்ளனர்.

தமிழரின் பிணங்கள் சிங்களத்தீவின் கரையிலே கிடக்கின்றன. ஆனால், திபெத்து அகதிகளைத் தமிழகத்திலே குடிபுகுத்த வடநாட்டு அரசு திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றது. இவர்களது ஆட்சியின் அழகை உலகுக்கே எடுத்துக் காட்டச் சிங்களக் கரையிலே ஒதுக்கப்பட்ட தமிழரின் பிணங்கள் போதாதா?

சிங்களக் கரையிலே செந்தமிழரின் பிணங்கள் இப்போது கிடக்கின்றன. இன்னும் இந்தக் கவலையற்ற அரசு நீடித்துக்கொண்டிருந்தால் — அலைமோதும் கடலோரமெல்லாம்—அலைகடலையும் அடக்கி அநிலத்தை ஆண்டுவந்தானே, அவன் பிணங்கள் ஒதுக்கப்படும். கடாரத்தையும், சாவகத்தையும் கட்டியாண்ட தமிழரின் பிணங்கள் கடாரத்து வீதிகளிலே, சாவகத்துச் சாலைகளிலே ஒதுக்கப்படும்.

இந்நிலை தமிழர்களுக்கு வந்துதானாகவேண்டுமா?

இந்நிலை வருதல் கூடாது என்று எண்ணுவோரின், கரங்கள் உயர்த்தப்படட்டும். உயர்த்தப்பட்ட கரங்களோடும்—உறுதி வாய்ந்த உள்ளத்தோடும் கிளம்புகின்றவர் வாயெல்லாம் "திராவிட நாடு திராவிடருக்கே" என உரத்து முழங்கட்டும்.

*

'திருட்டும்—மனச்சாட்சியும்'

—[நெடுமாறன்]—

தாம்பரம் செல்லுகின்ற மின்சார வண்டி எழும்பூர் நிலயத்தை விட்டுப் புறப்பட்டது. காலை வண்டியாகையால் கூட்டம் சற்று அதிகமாகவேயிருந்தது. சிறு குழந்தைகள் முதல் நரை திரைகொண்ட முதியோர்கள் வரை பலபேர் நிறைந்திருந்தனர். சென்னை நகருக்கு வெளியூரிலிருந்து பால் கொண்டுவந்து விற்றுத் திரும்பும் பால்காரர்கள், தங்கள் வழக்கமான தமிழில் சினிமா உலகில் புகுந்து, பத்திரிகையில் வந்த சுவையான சேதிகளில் மூழ்கி எழுந்து கொண்டிருந்தனர்.

'கடகட'வென்ற வண்டியின் ஓசையும் பல குரல்களின் மோதல்களும் வண்டியில் கலகலப்பை உண்டுபண்ணின. பலரும் பல உரையாடல்களிலாழ்ந்து கிடந்த போது, அந்த இளைஞன் மட்டும் சன்னலின் ஓரத்தில் உட்கார்ந்தபடியே வெளி உலகை நோட்டம் விட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய விழிகளில் ஏக்கமும், கவலையும் தேங்கியிருந்தன. துயர வெள்ளத்தில் சூழ்ந்து கிடந்த அவன், அடிக்கடி, தனக்குள்ளாகவே பொருமிக்கொண்டிருந்தான். பெருமூச்சும் எழுந்தது. வண்டி ஓடுகின்ற வேகத்தில் புகுந்த காற்றலைகள் அந்த இளைஞனுடைய எண்ணெய்ப் பசையற்ற தலைமயிரைக் கலைத்தபடி சென்றன. அவன் அலைகின்ற தனது தலைமயிரை ஒரு கையினால் ஒதுக்கியபடி இருந்தான்.

வண்டி இதற்குள் சேத்துப்பட்டுப் புகைவண்டி நிலையத்தை வந்தடைந்தது. ஏறுபவர் ஏறட்டும், இறங்குபவர் இறங்கட்டும்—எனக்கேன் வீண் கவலையென்று கூறுவதைப்போல் அவன் எதிலும் நாட்டம் செலுத்துபவனாக இல்லாமல், வானவெளியைப் பார்த்தான். நிர்மலமாகிய வான வீதியில் புகை மூட்டம் போன்று வெண் பஞ்சு மேகங்கள் ஊர்ந்தவாறே சென்றன. தன்னுடைய பக்கத்தில் ஒரு பெரியவர் வந்து உட்கார்ந்ததைக் கண்டு சற்று ஒதுங்கி உட்கார்ந்தான் அந்த இளைஞன். சோர்வுற்றிருந்தது அவன் உள்ளமும், உடலும். அவனுடைய மனது சஞ்சலத்தில் மூழ்கிக் கிடந்தது.

பட்டம் பெற்றவர்களுக்கே வேலை கிடைக்காமல் திண்டாடும் இந்தக் காலத்தில், பள்ளியிறுதி வரை படித்த தன்னை மதித்து வேலை எவர் கொடுப்பார்? என்று தன்னைத்தானே அவன் கேட்டுக் கொண்டான்.

"பிறகு நான் எப்படி வாழ்வேன்? என்னை நம்பியுள்ளவர்களுக்கு நான் எவ்வாறு ஆதரவு தருவேன்?" என்று அவனது உள்ளம் பொருமிற்று. கண்களில் நீர் சூழ்ந்தது.

கொண்டுவந்த சிறுதொகையையும் சென்னை பறித்துக்கொண்டது. இரண்டுநாட்களாகப் பசியின் கொடுமைக்கு ஆளாகிய அவன் உலக வாழ்க்கையை வெறுத்ததில் வியப்பில்லை. இப்பரந்த உலகில் மனித வாழ்க்கை ஏன் பலவிதமாக இருக்கிறது? ஒருவன் வயிறுபுடைக்க உண்டு, வாந்தியெடுத்தும், அஜீரணத்துக்காளாகியும் வாழ்கின்றான். இன்னுமொருவன் உடல்சோர உழைக்கின்றான், உண்ணுதற்கு ஒருகவளமின்றி வாடுகின்றான். உடுக்க ஆடையின்றி மனிதன் அலைந்திடுகையில், இன்னொருவன் காது, கைகளில் தங்கத்தையும், வைரத்தையும் இணைத்து அணிந்து மகிழ்கின்றான்.

வயிறு காயும்போதுதான், சிந்தனை வளர்கிறது என்பதுபோல், அந்த இளைஞன் சிந்திக்கத் துவங்கினான். வயிறு கிள்ளத்தொடங்கியது. முதல் நாள் மாலை தன்னுடைய நிலையை, ஒரு கம்பெனியின் மானேஜரிடம் கூறிப்பார்த்தான். அவரோ, தன்னால் ஒன்றுமியலாதெனக்கூறி, நாலணாவை மேசை மீது வைத்தார். பசியின் கொடுமை அதை எடுக்கச்சொல்லி அவனைத் தூண்டிற்று. வழியும் நீரை விழியோரம் வரைத்துடைத்துவிட்டு, அந்த காசையும் எடுத்துக் கொண்டு வெளிவந்தான்.

(16-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

6-11-60.

தம்பி!

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்ற செய்யுளை, வேறு எதற்காக இல்லையென்றாலும், செந்தமிழின் செம்மை கருதியேனும் இன்றும் பள்ளிகளில் பிள்ளைகள் படிக்கின்றார்கள் அல்லவா!

அந்த உழவனைச் சற்றுக் காண்போமா? கழகத் தோழர்கள் எடுத்தளிக்கும் படப்பிடிப்பு அல்ல; காங்கிரஸ் ஆட்சி அமைத்த குழுவினர் தருவது.

1956—57-ம் ஆண்டு, உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் நிலைகுறித்து, ஆய்ந்தறிந்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். இதற்கு முன்பும் இதுபோன்றதோர் அறிக்கை வெளியிடப்பட்டது.

வேறு எந்தச் செயலிலே காட்டத் தவறினாலும், காங்கிரஸ் துரைத்தனம், பல்வேறு குழுக்கள் அமைப்பது, அறிக்கைகள் வெளியிடுவது, ஆய்வுரைகளைத் தருவது எனும் செயலிலே மட்டும், மிகமிகச் சுறுசுறுப்புக் காட்டுகிறது காங்கிரசார், ஆளவந்தார்களான பிறகு, வெளியிடப்பட்ட, அறிக்கைகளைக் குன்றெனக் குவித்துக்காட்டலாம்— அளவில் குன்று! பலன்? குடிஅரசுத் துணைத் தலைவர், டாக்டர் இராதாகிருஷ்ணன், சின்னாட்களுக்கு முன்னம் ஆய்வுக் குழுக்கள் அமைப்பிலே, அறிக்கைகள் வெளியிடுவதிலே, எனக்குத் துளியும் நம்பிக்கையில்லை, நானே, பல ஆண்டுகளுக்கு முனபு, பல்கலைக் கழகம் குறித்து ஆய்ந்தறிந்து அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்; பலன ஏதும் விளையவில்லை!!—என்று மெத்த வேதனையுடன் பேசினார்.

ஆளவந்தார்கள், குழுக்களை அமைக்கிறார்கள்; குழுக்கள் உலாவருகின்றன; உரையாடல்கள் உற்சாகத்துடன் நடைபெறுகின்றன; அறிக்கைகள் ஆர்வத்துடன் தயாரித்து வெளியிடுகிறார்கள்;. அந்த அறிக்கைகளோ குவிகின்றன; செயல்பட வேண்டிய துரைத்தனமோ, துயில்கொண்டு விடுகிறது.

அறிக்கையின் மூலம் விளைவு, விருப்பத்தக்க முறையில் கிடைப்பதில்லை என்றாலும், கூர்ந்து பார்க்கக்கூடியவர்களுக்கு, நாட்டு நிலைமையையும், நாடாள்வோரின் திறனற்ற போக்கையும் எடுத்துக்காட்ட இவை பயன்படுகின்றன. அத்தகைய அறிக்கைகளிலே ஒன்றுதான், 1956—57-ம் ஆண்டு வெளிவந்தது; உழவர் பெருங்குடிமக்கள், இந்த உத்தமர்கள் ஆட்சியில் இராமராஜ்யம் என்பதே இராமராஜ்யம்தான

எல்லோரும் இந்நாட்டு மன்னர் [2]

என்று தமக்குத்தாமே புகழாரம் சூட்டிக்கொள்வோர் ஆட்சியில், எத்தகைய நிலைமையிலே உள்ளனர் என்பதை இந்த அறிக்கை காட்டுகிறது.

•

3600 சிற்றூர்களிலே நிலைமைகளைக் கண்டறிந்து அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

உழவுத் தொழிலில் உள்ளவர்கள், எவர், என்பதற்கு, ஆய்வுக் குழுவினர் ஒரு இலக்கணம் வகுத்துக்கொண்டு, அறிக்கை தயாரித்துள்ளனர். அந்த இலக்கணத்தின்படி, வருவாயின் பெரும்பகுதி, உழவுத் தொழிலில் கிடைக்கும் கூலியாக எவருக்கு அமைந்து இருக்கிறதோ, அவர்களே, உழவர் என்பதாகும்.

அந்த முறையில் நடத்தப்பட்ட ஆய்வு, என்ன உண்மைகளைத் தந்திருக்கிறது?

உழவர்களின் நிலைமை, நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டு வருகிறது.

நிலமற்ற உழவர்களின் தொகை அதிகமாகி விட்டிருக்கிறது.

உழவுத் தொழிலில் உள்ளவர்களின் கூலி, குறைக்கப்பட்டுப்போயிருக்கிறது.

முன்பு 109 புதிய காசுகள், கூலியாகப்பெற்று வந்த உழவர்களுக்கு இப்போது 96 புதிய காசுகள் மட்டுமே கிடைக்கின்றன.

உழவுத் தொழிலிலே ஈடுபட்ட, பெண்களுக்கு, முன்பு 68 புதிய காசுகள் கிடைத்தன, காங்கிரசாட்சியின் சிறப்பின் விளைவாக(!) இப்போது அந்தக்கூலி குறைந்து, 59 புதிய காசுகள் பெறுகின்றனர்—தாய்மார்கள்

சிறுவர்களோ, முன்பு பெற்றது 70 புதிய காசுகள்; இப்போது 53!

கொட்டுங்கடி! கும்மி கொட்டுங்கடி!
கோலேந்தும் காங்கிரஸ் புகழைப் பாடி!

என்று, 'மாதர் பகுதி' கும்மி கொட்டுகிறது, ஒட்டு வாங்க!! ஆனால், அறிக்கையைப் பார்த்தாலோ, காங்கிரசாட்சியிலே ஏர்பிடித்தோன் திண்டாட்டம் வளருவது தெரிகிறது.

1951-ம் ஆண்டு அறிக்கைப்படி, உழவர் குடும்பத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு 447 ரூபாய் வருவாயாம்! 1957-ம் ஆண்டிலே கணக்கெடுக்கும்போது, 437 ரூபாய் வருவாய்தான் கிடைக்கிறதாம்!!

கோழி கூவாமுன்பு எழுந்திருந்து சென்று, கோட்டான் கூவும்வரை பாடுபடும், உழவன், வருவாய் குறைந்துவிட்டிருக்கிறது. துணிச்சலுடன், அமைச்சர்கள், அவனுடைய குடிசைக்குப் பக்கத்திலேயே, கொடிமரம் நடுகிறார்கள்; கும்மி கொட்ட, கொட்டு முழக்கிட, படை வருகிறது; பத்திரிகைகளோ, இந்த வளர்ச்சியை எடுத்துக்காட்டப் பத்தி, பத்தியாகச், செய்திகளை வெளியிடுகின்றன.

நம்மவர்கள் வருகிறார்கள் நாடாள! நல்லவர்கள் வருகிறார்கள் பாடுபட! இனி நமது வருவாய் வளரும், வாட்டம் குறையும் என்று எண்ணினர், உழுதிடப் போர்! வருவாய் குறைந்துவிட்டிருக்கிறது; வாய் வீச்சு மிகுந்துவிட்டிருக்கிறது.

உழவர்களின் வருவாய் குறைந்திருப்பது மட்டுமல்ல, வேதனையூட்டும் உண்மை; அவர்களின் வாழ்க்கைச் செலவு அதிகமாகிவிட்டிருக்கிறது.

முன்பு ஆண்டு ஒன்றுக்கு, 461-ரூபாய் இருந்தால், குடும்பம், ஏதோ இழுத்துப்பறித்துக்கொண்ட நிலையில் நடந்து வந்தது; இப்போது, குடும்பச் செலவு, ஆண்டொன்றுக்கு, 618-ரூபாய் பிடிக்கிறதாம்.

•

தம்பி! கணக்குத் தயாரித்தது, நம் கழகமல்ல!! காங்கிரசாட்சி அமைத்த ஆய்வுக்குழு! கவனமிருக்கட்டும்! கவனப்படுத்திவை!

உழவர்களுக்குக் கடன் பளுவும் ஏறிவிட்டிருக்கிறது.

இந்த இலட்சணத்தில் ஆட்சியை நடத்திக்கொண்டு, பாரதிக்கு விழாக்கொண்டாடும்போது,

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்

என்று பாடிவிட்டால், பசித்த வயிறுக்குப் பாலும் பழமுமா கிடைத்துவிடும்? பாவிகளே! உங்களை நம்பி நாசமானோமே!!—என்று கொதித்தெழுந்து கேட்கத் தோன்றுகிறது, மாடென உழைத்து ஓடென ஆகிவிட்டிருக்கும் உழவர்களுக்கு. ஆனால், எப்படிக் கேட்பார்கள்? பேசவருகிற அமைச்சருடன் தான் பராக்குக் கூறுவோர், பல்லிளிப்போர், பர்மிட் கேட்போர், பட்டுப் பட்டாடைகள், பவுன் துப்பட்டாக்கள்; பஸ் ரூட்டுகள், இப்படி ஒரு படையே வருகிறதே!! எப்படி மனதிலுள்ளதை எடுத்துக்கூற, உழவர்களுக்குத், தைரியம் ஏற்படும்.

அதோ, அமைச்சரின் கால்தூசு தன்மேலே பட்டாலே போதும், அதைக்காட்டியே, அங்காடியிலே, செல்வாக்குப் பெறலாம் என்று எண்ணிக்கொள்பவர் போல நிற்கிறாரே, திருவாளர். சமயமறிந்தான் பிள்ளை, அவருக்குக் கண்ணுக்கு எட்டியதூரம் வரையிலே, கழனி! காடு என்கிறார் வயலை! கடாமாடுகள் என்கிறார், அதை உழுதிடப்பவர்களை! 'கனம்' என்கிறார், அமைச்சரை! இருளை ஒட்டும், அவர் காதிலுள்ள வைரக்கடுக்கன்! உடலிலே தங்கம், உள்ளத்திலே, இரும்பு!! அவரிடம் அண்டிப்பிழைக்கிறான், உழவன், அவன் அமைச்சர் பொய்யுரைக்கிறார் என்று, எப்படிக் கூறமுடியும்?

காங்கிரசாட்சியிலே ஆதித்திராவிடர்
வீடுகளிலே வெள்ளிப்பாத்திரங்கள் காணப்
படும் அளவுக்கு வளம் கொழிக்கிறது,

என்று வாய் கூசாமல் கனம் கக்கன் பேசுகிருர்.

ஐயா! தகரக்குவளையைப் பார்த்துவிட்டு இப்படிப் பேசலாமா? என்று கேட்கத்தோன்றுகிறது. ஆனல், அமைச்சரைச் சுற்றி நிற்கும் கனதனவான்கள், சற்றுத் தொலைவில், கெட்டித்த துப்பாக்கிகளுடன் தயாராக நின்றுகொண்டிருக்கும், போலீஸ் படையினர், இவர்களைக் கண்டபிறகு, ஏழை எப்படிப் பேச முடியும்?

*

அஞ்சி அஞ்சிச் சாவார்
இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே!

என்றல்லவா, பாரதியார், பாடினர்.

அச்சப்பிடித்தாட்டும் நிலையில் உள்ள, ஏழை உழவர்களை, போலீஸ் படை சூழ நின்றிட; பூமான்கள் உடனிருக்க, அதிகாரிகள் ஆரத்தி எடுத்திட, உலாவந்து, அமைச்சர்கள் காணும்போது, இலி அதிகமாகுமேயன்றி, வேறென்ன ஏற்படமுடியும்.

அதை அறிந்து, அகமிக மகிழ்ந்துதான், அமைச்சர்கள், அமுலில் இருந்துகொண்டே, ஓட்டு வேட்டை ஆடவேண்டும். பஞ்சை பராரிகளிடம் பய முட்டியே ஓட்டுகளைப் பறித்துக்கொள்ளமுடியும், என்று நம்பிக்கொண்டிருக்கின்றனர்;

இந்த முறைகேடான போக்கைத்தான்
மலைபோலக், காங்கிரஸ் கட்சி நம்பிக்கொண்
டிருக்கிறது.

குடி அரசு முறை, மக்களிடம் 'ஓட்டு' வாங்கி நடத்தப்படுவது.

ஆனல், அதிகார அமுலைக்கண்டால், இயல்பாகவே, அச்சப்படும், மக்கள், பெரும் அளவுக்கு இருக்கும் இந்த நாட்டில், இந்த நாட்களில்; அமைச்சர்களாகப் பதவியில் இருந்துகொண்டே பவனி வந்து, தேர்தல் நடத்துவது எப்படி நியாயமாகும்?

செய்தவைகளை எடுத்துக்காட்டி, மக்களுடைய ஆதரவை, மீண்டும் பெறமுடியும் என்ற நம்பிக்கை இவர்களுக்கு இருக்குமானல், தேர்தலுக்கு ஒரு ஆறு திங்களுக்கு முன்பாகவேனும், பதவியைவிட்டு விலகி நின்று, காங்கிரஸ்காரர்களாக மட்டும் கிராமப்புறம் சென்று, ஓட்டுக் கேட்கவேண்டும்.

அப்படிக் கேட்டுப் பெரும் அளவு ஓட்டு, இவர்கள் பெற்றுவிடுவார்களானல், தம்பி! அதுதான், அறவழி நடாத்திடும் அரசியல் என்று கூறத்தக்கதாகும்.

அஃதன்றி, அமைச்சர்களாகக் கொலுவிருந்த வண்ணமே, 'ஓட்டு' வேட்டையிலும் ஈடுபடுவார்களானல், குடி அரசு முறையைக் கோணல் வழியில் பயன்படுத்தி, ஆதிக்கம் தேடிக் கொள்கிருர்கள் என்றுதான், அறிவாளர் எவரும் கூறுவர்.

*

கட்சிக் கண்ணேட்டத்துடன் அல்ல, இதனை நான் கூறுவது.

விதி, பழமைப் பிடி, ஜாதி, எனும் பல கொடுமையான பிடிப்புகளிலிருந்தே இன்றும் விடுபடமுடியாமல், தத்தளித்துக்கொண்டிருக்கும், பாமர மக்களிடம், அதிகாரம் தரும் அச்சத்தையும் ஏவிவிட்டு, ஓட்டு வாங்குவது, அறமல்ல; அரசியலை, வெறும் சூதாட்டம் ஆக்குவதேயாகும், என்ற பொது நெறி பற்றி எடுத்துரைக்கிறேன்; கட்சி வளர்ச்சிக்காக அல்ல.

*

மன்னன் எதையும் செய்யலாம், என்பது தவறு, தீது, கொடுமை, என்பதால்தான், முடி அரசு முறையை மாற்றிக், குடி அரசு முறையைத் தேடினர்; குடி அரசிலோ, மந்திரிகள் எதையும் செய்ய வல்லவர்கள் என்பதை உணர்ந்து, உள்ளத்தில் இலி குடிகொண்ட நிலையில் இருக்கும் மக்களிடம், மந்திரிகளாக இருந்துகொண்டே, ஓட்டுக் கேட்பது முடி அரசு முறையின் கேடுபாட்டைவிட மோசமான நிலைமையையன்றே ஏற்படுத்திவிடும்.

தலைமை நிலைய அறிக்கை (அ) 6/60

நிதி நிகழ்ச்சிகள்

1. கழகக் கிளை—கழகச் சார்பு மன்றங்கள்—கழகத் தோழர்கள் — கழக ஆதரவாளர்கள் ஆகியோர் சார்பில் நிதி திரட்டும் நோக்கத்துடன் சிறப்புக் கூட்டம், நாடகம், இசை, நடனம், திரைப்படம்போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடுசெய்வதாக இருந்தால், கழகப் பிரச்சாரச் செயலாளர் அனுமதி பெற்ற பிறகே அவை நடத்தப்படுதல் வேண்டும்.

2. நிதி நிகழ்ச்சி எந்த ஊரில் நடைபெறுகிறதோ, அந்த ஊர்க் கிளையின் செயற்குழுவில் வைத்துத் தீர்மானம் மூலமாக நிறைவேற்றி மாவட்டச் செயலாளரின் ஒப்புதலுடன், விண்ணப்பத்தைக் கழகப் பிரச்சாரச் செயலாளரின் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

3. தலைமைக் கழகம் ஏற்பாடு செய்யும் நிதி நிகழ்ச்சிகளாக இருந்தால், அவற்றைச் சம்பந்தப்பட்ட மாவட்ட-வட்டக் கழகங்களின் செயலாளர்களுக்குத்தெரிவித்து, வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு தலைமைக் கழகம் அறிவிக்கும்.

4. நிதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் கழகச் சொற்பொழிவாளர்கள், கழகக் கலைஞர்கள் ஆகியோர், கழகப் பிரச்சாரச் செயலாளரிடம் அந்த நிகழ்ச்சிக்கான அனுமதி பெறப்பட்டதை அறிந்து பிறகே, கலந்துகொள்ள ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

'அறிவகம்', சென்னை-13.
28—10—60

நெடுஞ்செழியன்,
பிரச்சாரச் செயலாளர்.

எனவேதான், குடிஅரசு முறை, இந்த நாட்டைப் பொறுத்த வரையில் உண்மையான, மக்களாட்சி அமைய வழிகோல வேண்டுமானால், பொதுத் தேர்தலுக்கு ஆறு திங்களுக்கு முன்னலாவது காங்கிரஸ் மந்திரிகள் பதவியைவிட்டு விலகிச், சொந்த அறிவாற்றலைக் காட்டிக், கட்சி சாதித்தவைகளை எடுத்துக்கூறி 'ஓட்டு' கேட்க வேண்டும்.

*

முன்பு இருந்ததைவிடக் காங்கிரசுக்கு இப்போது வலிவு அதிகமாகி இருக்கிறது என்று முதலமைச்சர் காமராஜர் பேசி வருகிருர்.

*அவர் கூறுவதிலே அவருக்கே நம்பிக்கை இருக்குமானல், தேர்தலுக்கு ஆறு திங்களுக்கு முன்பு, பதவியை விட்டு விலகி, வெறும் காமராஜராக, கர்ம வீரர் காமராஜராகவோ, பச்சைத் தமிழர் காமராஜராகவோ, கிராமம் கிராமமாகச் சென்று, போட்ட பாதைகள், வெட்டிய வாய்க்கால்கள், தோண்டிய கிணறுகள், திறந்த பள்ளிக்கூடங்கள், ஏற்றிய விளக்குகள்—இவை*களுக்காக வாங்கிய வரித்தொகை —*இந்தக் கணக்கைக் காட்டி, 'ஓட்டு' வாங்கி விடட்டும், பார்க்கலாம்!!*

*

தம்பி! இந்த ஏற்பாடு, இன்றுள்ள நிலையில், குடிஅரசு முறையைக்கூடத் தூய்மைப்படுத்த, மிக மிகத் தேவை.

எல்லா அரசியல் கட்சிகளுமே, இதனை நாட்டு மக்கள் முன் ஒரு, உடனடிப் பிரச்சினையாக வைத்து, மக்களின் வலிவைத் திரட்டிக் காட்டிக், காங்கிரஸ் கட்சியை இந்த ஏற்பாட்டுக்கு இணங்கும்படி, வலியுறுத்த வேண்டும்.

ஏதோ ஓரளவுக்காகிலும், குடிஅரசு முறை பலன் தரவேண்டும் என்று விரும்பினல், இந்த ஏற்பாடு, நடைமுறைக்கு வந்தே ஆகவேண்டும்.

பாபு இராஜேந்திர பிரசாத், *சட்டம் இயற்றச் செல்வோர்களுக்குத் தகுதிகள் இருத்தல் வேண்டும் என்று கூறினர்—அதுபோலவே, அல்லது அதனை விட மிக மிக அவசியமாகவும், அவசரமாகவும், இன்று தேவைப்படுவது, மக்களை மிரட்டி 'ஓட்டு' வாங்கும் முறையை ஒழித்துக் கட்டுவது.*

தேர்தலில் ஈடுபட்டு, மக்களின் ஆதரவைக் கேட்டுப் பெறச் செல்வோர், அமைச்சர்கள் என்ற 'அந்தஸ்து' பலத்தைக் காட்டுவது, அவர்களுக்கு பதவியை விட்டுவிட்டால், மக்களின் நல்லாதரவைப் பெறத்தக்க வேறு தகுதிகள் இல்லை என்பதையே, உலகுக்கே எடுத்துக் காட்டும், தரக்குறைவான காரியமாகிப் போகும்.

●

கட்சி மகத்தான காரியங்களைச் சாதித்துவிட்டது என்பதற்காக அல்ல, அமைச்சர்களாக இருக்கிருர்களே, என்பதற்காகவே, நெஞ்சின் குமுறலை அடக்கிக்கொண்டு, கிடக்கிரேும், என்று பேசாதவர்கள் இல்லை.

குடிஅரசு முறையிலே செய்யப்படவேண்டிய திருத்தங்கள் குறித்துப், பாபு இராஜேந்திரர் போன்ருேரெல்லாம், அக்கரை காட்டிப் பேசுவதால், தம்பி உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினையை எடுத்துரைத்தேன் — என் வார்த்தையைக் கேட்டுவிட்டு, அமைச்சர்களுக்கு, 'ரோஷம்' பொத்துக்கொண்டு வந்துவிடும், அடே! அறிவிலி! எமக்கு இருக்கும் செல்வாக்கு, அமைச்சர்களாக இருப்பதனல் மட்டும் என்ரு, வாய்த் துடுக்காகக் கூறுகிருய்? எம்மை நாடு அறியும்—நன்கு அறியும்!! எமது அறிவாற்றல், வீரதீரம், தியாகம், யாவும், அறியாத வீடு உண்டா? கேவலம், அமைச்சர் பதவியைக் காட்டியா, நாங்கள் 'ஓட்டு' வாங்கவேண்டும்? அங்ஙனமா, எண்ணிக்கொண்டாய்? இதோ பார், பதவி பழஞ் செருப்பு — வீசி எறிந்துவிட்டு, மக்களை அணுகி, எமது சொந்தத் தகுதி, திறமை, சாதித்தவை இவைகளைக் காட்டியே, ஓட்டுக்கேட்டுப் பெறுகிரேும்!! — என்று கூறிவிடுவார்கள், என்ற நம்பிக்கையுடன் இதைக் கூறவில்லை. நாடு அறியட்டும், இவர்கள், நிலைமையை —மக்கள் திரண்டெழுந்து வலியுறுத்தட்டும்—பொய்க்கால் இல்லாமல், பூச்சு, பூணரம் இல்லாமல், வந்து 'ஓட்டு' கேளுங்கள் — அதுதான் முறை — எல்லோரும் இந்நாட்டு மன்னர்*—என்று தத்துவம் பேசுகிறீர்கள்—ஆனல்: அமைச்சர்களாக இருந்துகொண்டு, ஓட்டுக் கேட்க நீவிர் வருகிறபோது, நாங்கள், கைகட்டி வாய்பொத்தி நிற்கவேண்டி இருக்கிறது—நீவிர் கல்லைக் கனி என்று கூறினலும், சுடு சொல்லை எம்மீது வீசினலும், மறுத்திட மார்க்கமின்றிக் கிடக்கவேண்டி நேரிடுகிறது — எப்பக்கம் திரும்பினலும், உமக்கு பதவி தரும் பலம் தெரிகிறது—தினில் பிறக்கிறது— ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக்கொள்கிறீர்கள்—இது குடிஅரசு முறை அல்ல — தடிஅரசு முறையாகிப் போகிறது. ஆகவே, எங்கள் தயவை நாடி வருகிற போதாகிலும், தடிதூக்கிக் கோலம் கலைத்துவிட்டு வாருங்கள்—காட்டவேண்டிய கணக்கைக் காட்டுங்கள் நாங்கள் கேட்கவேண்டியவைகளைக் கேட்கிரேும் — அதுதான் முறை—என்று மக்கள் கூறவேண்டும், என்பதற்காகவே, இதனை எழுதுகிறேன்.*

●

தம்பி! பதினைந்து ஆண்டுகளுக்குமேல் இருக்கும் என்று நினைக்கிறேன்—சென்னையில், நான் ஓர் நாட

கத்துக்குத் தலைமை வகிக்க அழைக்கப்பட்டுச் சென்றிருந்தேன். எனக்கு வலப்புறம், நாடகக் குழுவின் உரிமையாளர் அமர்ந்திருந்தார்—மறுபுறம், அவருடைய மகன், சிறுவன் — ஏழெட்டு வயதிருக்கும்—அமர்ந்திருந்தான்.

நாடக முடிவில், பேசச்சென்றேன். சிறந்த முறையில் அமைந்திருந்த நாடகம் அது. அன்று அந்தக் குழுவில் இருந்தவர்களில், பலர், இன்று, திரையில் ஒளிவிடும் திறமைமிக்க நட்சத்திர நடிகர்களாக உள்ளனர். அவர்கள் அந்தநிலை பெறப்போகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டத்தக்க சிறப்புடனேயே, அவர்களின் அன்றைய நடிப்பு இருந்தது. பாராட்டிப் பேசினேன். உரிமையாளர், மாலை அணிவித்தார். அவர் மகன், மாலையையே உற்று உற்றுப் பார்த்தான்.

சிறுவன், மாலையை மிக உன்னிப்பாகப் பார்த்து விட்டுத், தன் தகப்பனாரைப் பார்த்து, "அப்பா! இவர் சின்ன மந்திரியா?"—என்று கேட்டான். எனக்கு, அந்தக் கேள்வி வியப்பாக இருந்தது. அவர், சற்றுச் சிரமப்பட்டார். சிறுவர்களா, கேள்விக்குப் பதில் பெறாமல் விடுவார்கள்! விளரியபடி இருந்தான்—அவர், வேறு பக்கமாகப் பேச்சைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

"இவர்தானடா, ...அண்ணாதுரை... அண்ணா... தெரியாது?"—என்று கேட்டார். சிறுவன் செல்லமாக, "ஓ! தெரியுமே! இவர்தான் அண்ணா! அது தெரியும். ஆனால், இவர், சின்ன மந்திரியா?"—என்று மீண்டும் கேட்டான். நான் சிறுவனைப் பார்த்து, "தம்பி! ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்று கேட்டேன். உரிமையாளர், திகைத்தார்—சிறுவன், சொன்னான், "நேற்று ஒருவர் தலைமை வகித்தார். அவருக்கு இந்தாப் பெரிய மாலை போட்டாங்க, அப்பா. அவர் யார் என்று கேட்டேன், மந்திரி என்று சொன்னார். இப்ப, உங்களுக்குச், சின்ன மாலை தான் போட்டாங்க... அதனாலேதான், நீங்க சின்ன மந்திரியா, என்று கேட்டேன்" — என்றான். சிரித்தேன், உரிமையாளரின் சங்கடத்தைக் குறைத்திட. அந்த உரிமையாளர், என்னிடம் உள்ளன்பு கொண்டவர்—அன்றும், இன்றும். அன்றும் சரி, இன்றும் சரி, மந்திரிகளைவிட, நாடகத்தைக் காண்பதிலும், சுவைப்பதிலும், நடிப்புத் திறனைக் கண்டால், நடிகர்களின் விருப்பு வெறுப்புப்பற்றி மறந்து பாராட்டுவதிலும், நான் அதிக ஈடுபாடு கொண்டவன்; இதை நாடு அறியும். என்னைத் திட்டுவதற்கு, மாற்றுக் கட்சியினர், பயன்படுத்தும் வார்த்தையிலே, மிக முக்கியமான சொல்லே, கூத்தாடி என்பதல்லவா?

இருப்பினும், மந்திரி தலைமை வகிக்கிறார் என்றால், மற்றவர்களுக்குச் செய்கிற மரியாதைகளைவிடச் சற்றுச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்ற நினைப்பும், நிலையும், யாருக்கும் ஏற்பட்டுவிடுகிறது.

இது தவறும் அல்ல! அவர்களிலே, மிகப் பலர், தலைமை வகிக்கும் வாய்ப்புப் பெற்று, 'பெரியமாலை' என்றானே சிறுவன், அவ்விதமான மரியாதைகளைப் பெறுவதே, மந்திரிகள் என்ற பதவியில் இருக்கும் போதுதான்.

முன்னும் இல்லை; பின்பும் அநேகமாக இருக்காது.

என்போன்றோர்களின் நிலை, அது அல்ல.

ஆகவே, அமைச்சர்கள், 'பெரிய மாலை' போட்டுக் கொள்வது, தவறும் அல்ல, தகாது என்றும் கூறுவது கூடாது. ஆனால், சிறுவனுக்கு என்ன தோன்றிற்று? மந்திரிக்குப் பெரிய மாலை—அண்ணாதுரைக்குச் சின்ன மாலை—ஆகவே, இவன் சின்ன மந்திரி!—என்றுதானே!

குழந்தை உள்ளம் அது. குடிமக்களில் பெரும்பாலோருக்கும், நிலை அதுதான். அறிவாற்றல், தகுதி திறமை, என்பவைகளைப் பார்த்துமட்டும் அல்ல, பதவியின் உயர்வைக் கண்டு, 'பெரிய மாலை' போடவேண்டியவர்களாகிறார்கள். மாலை மரியாதை மட்டும்தான் என்றால், நட்டமும் இல்லை, ஆபத்தும் எழாது. ஆனால், பதவி காரணமாக மூட்டிவிடப் படும், மயக்கம், அச்சம், காரணமாக, 'ஓட்டுகளை'யும் போடும் நிலை ஏற்பட்டுவிடுமானால், பிறகு குடிஅரசு

தலைமை நிலைய அறிக்கை (அ) 7/60

தி. மு. க.

தலைமைச் செயற்குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம், 6—11—60 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு, மதுரை நகரில் டாக்டர் ஏ. அருணாசலம் அவர்கள் இல்லத்தில், அவைத் தலைவர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் பொருள்கள்:

1. தேர்தல் நிதி—மாவட்டங்களின் பங்கு;
2. பொதுச்செயலாளராலும் உறுப்பினர்களாலும் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் முதலியன.

'அறிவகம்', சென்னை-13
29—10—1960

கே. ஏ. மதியழகன்,
தலைமை நிலையச் செயலாளர்:

முறை, கோணலாட்சிக்குத்தானே, வழி ஏற்படுத்தும்.

தம்பி! ஒரு கணம் மீண்டும், அந்த நாடக மேடைக்குப் போவோம். மந்திரி என்பதால், 'பெரிய மாலை' போட்டுக் கொண்டதாலே ஆபத்து ஏதும் ஏற்பட்டுவிடாது—ஆனுல், மந்திரியின் கரம் பட்டவன்தான் திறமுள்ள நடிகன், என்று ஒரு முறை உண்டாக்கிவிட்டிருந்தால், என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும்? இன்று மந்திரிகளின் கரம் குலுக்கிக் களிப்படையும் நடிகர்களேகூட, ஒரு சமயம், மந்திரியின் கண் பார்வை கிடைக்காது போயிருக்குமானுல், உரிய, உயர் இடம் பெற்றிருக்க முடியாது.

நடிகன், எந்த இடம் பெறத் தக்கவன் என்பது, ரசிகர்களின், கைஒலியில் இருக்கிறது; மந்திரியின் பார்வையில் அல்ல!!

அதுபோலவே, யார் மக்களின் ஓட்டுகளைப் பெறத் தக்கவர்கள் என்பது. அவர்களின் அறிவாற்றல், செய்தவை, இவைகளைக் காட்டிப் பெறுவதாக இருக்கவேண்டும்—பதவியைக் காட்டிப் பறிக்கப்படுவதாக இருத்தல் கூடாது—அது தீது—பேராபத்துமாகும்.

*

குடி அரசு முறை, காங்கிரசாரிடம் இருப்பதால், உழவர்களின் நிலை, தேய்ந்துவிட்டிருக்கிறது என்பது, ஆய்வுக் குழுவின் அறிக்கையிலேயே; விளக்கமாக்கப்படுகிறது.

இதை ஆதாரமாகக் கொண்டு, 'ஓட்டு' அளிப்பது என்ருல், உழவர் பெருங்குடி மக்களின் ஆதரவு, எப்படிக், காங்கிரஸ் கட்சிக்குக் கிடைக்க முடியும்?

இவ்வளவும் செய்துவிட்டு, உழவனைக் கடனாளியாக்கி, நோயாளியாக்கி, உழல வைத்துவிட்டுப், பதவியைக் காட்டிப் பயமூட்டி, 'ஓட்டு' வாங்கினுல், அது, கூர்மையான கத்தியைக் காட்டி நடத்தப்படும் வழிப்பறி, அல்லது சுவையான பண்டம் கொடுத்து குழந்தையை ஏய்த்துவிட்டு நடத்தப்படும் களவு, போன்றதாகத்தானே, ஆகிவிடும்.

இதனைத்தான் எல்லா அரசியல் கட்சிகளும், குடி அரசு செம்மையாக்கப்படவேண்டும் என்பதிலே அக்கறை கொண்டவர்களும், கவனிக்கவேண்டும்.

*

குடி அரசு முறையை ஏற்று நடத்திக்கொண்டு வரும் காங்கிரஸ் கட்சி, உழவர்களை எந்த நிலையில் வைத்திருக்கிறது என்பதைக் கண்டோமல்லவா! தம்பி! நெசவாளியைக் காண்போம்! அவன், இவர்கள் ஆட்சியிலே, எப்படி இருக்கிருன்? நெய்யுந் தொழிலுக்கு நிகர் இல்லை என்று நேர்த்தியாகக் கூறப்பட்டிருக்கிறது. காங்கிரசாட்சியோ, பட்டமரம் துளிர்த்திடச் செய்யும் 'மாயவிகள்' நிரம்பிய கட்சி என்று பாமரரிடம் கூறி வைத்திருக்கிருர்கள். இந்நிலையில், நெசவாளி முன்னேற்றம் அடைந்தல்லவா இருக்கவேண்டும்! ஆனுல், எப்படி இருக்கிருன்? நான் எதற்காகத் தம்பி! அதைச் சொல்லிக், காங்கிரசாரின் கோபத்தைக் கிளறவேண்டும். ஒரே அடியாகச் சொல்வார்கள்—இவனுக்கு நெசவுத் தொழில்பற்றி என்ன தெரியும்!—என்று. ஆகவே, நான் ஏதும் கூறப் போவதில்லை—இதோ ஒரு நெசவாளி! நீயே, கேள்.

*

நான் ஓர் ஏழை நெசவாளி, எனக்கு வயது 17. என் தந்தை சிறுவயதிலேயே என்னையும் என் தம்பி, தங்கை ஆகியவரையும் விட்டுவிட்டு, இறந்து விட்டார். நான் தறி நெய்து, நான், தாயார், தம்பி, தங்கை ஆகிய நால்வரும் சாப்பிடவேண்டும். வீட்டுக்கு வாடகை கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்குப் படிப்பு, சம்பளம், துணி, மருந்து, வைத்தியம்......

இதோ எனது வருமானம்.

மாதம் ஒன்றுக்கு நான் நெய்வதால் கிடைக்கும் கூலி ரூபாய் 40. எனது தாயார் கூலிக்கு நூல் சுற்றினுல் மாதம் 7, ரூபாய் கிடைக்கும். ஆக ரூபாய் 47 தான் மாதவருமானம். இதற்குக் குறையுமே தவிர, அதிகமாவது கிடையாது.

தறியுடன் கூடிய வீட்டுவாடகை ரூபா 7

அரிசி, பருப்பு, சாப்பாட்டுவகை 30

பள்ளிக்கூடச் சம்பளம் அல்லது புத்தக வகை. 2—8—0

ஆகச்செலவு 40—0—0

இனி வைத்தியம், போக்குவரத்து, ஆடைகள், சினிமா இவைகளுக்கு நான் எங்கேபோவது? தவிர, எனக்குத் திருமணம் ஆகவேண்டும். என் தங்கைக்கும் செய்ய வேண்டும். பெண்ணுக்கு நகை சீர் வரிசை இவைகள் உண்டல்லவா? இவற்றிற்கெல்லாம் பணம்தேவை. மேலும் எனது வயோதிகத் தாயாருக்குப் பிற்கால அந்திமக்கிரியைகள் — இவையெல்லாம் நான் சுமக்கும் பாரமாகும். எங்கே இதற்கெல்லாம் வருவாய்? நான் எந்த ரகம் போட்டுக் கொண்டு கைத்தறியிலே நெய்தாலும், மாதம் சுமார் 40, 50, 60 ரூபாய்க்குமேல் வருவாய் காண முடியாது. இது என் குடும்பத்துக்குப்போதுமா? பெருகிவரும் குடும்பத்திற்கும் அதனுல் ஏற்படும் செலவுகளுக்கும் நான் எங்கே போவது?

*

தம்பி! என்ன பதில் அளிக்கப்போகிறாய்? நான், என்ன அண்ணா! பதில் அளிக்க முடியும்? அவர்களை ஆண்டிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி அல்லவா பதில் கூறவேண்டும் — என்றுதான் கூறுவாய். நெசவாளி காங்கிரஸ் கட்சியினரைக் கேட்கிறான் என்றால்,

கலகக்காரன்
கழகக்காரன்

என்று ஏசி, அவன் வாயை அடைத்துவிடமுடியும்—முடிகிறது.

கூட்டுறவு நாடு
காங்கிரசைத் தேடு

என்று புத்திமதி கூறிட, பெரியவர்கள் முன்வருகிறார்கள்.

காலத்துக்கேற்ற ரகம்வேண்டும்.
நாணயமாகத் தொழில் நடத்தவேண்டும்

என்று எச்சரிக்கை கூறிடவும் கதராடையினர் உள்ளனர்.

இதையே நம்பிக்கிடக்காதே.
விசைத் தறி வைத்துக்கொள்.
வேறு வேலைக்குப்போ!

என்று பயங்கரமான, அல்லது பயனற்ற யோசனைகளைக் கூறவும், காங்கிரசில் ஆட்கள் உள்ளனர்.

தொழில்துறை அமைச்சர் வெங்கட்டராமன், நொந்து கிடப்பதாகப் பேசும் நெசவாளி கேட்டிடும் கேள்விக்குப்பதில், எவ்வளவு பளிச்சுப் பளிச்செனத் தருகிறார் தெரியுமா, தம்பி! அதைப் படித்தால்; நெசவாளிமீது கோபமேகூட ஏற்பட்டுவிடக்கூடும். அவ்வளவு அன்புடன், அக்கரையுடன், பட்டியல் தருகிறார் அமைச்சர், இன்னின்ன உதவிகள் செய்கிறோம், என்பதாக. அவரே கூறட்டும், கேள், தம்பி!

"...சமுக பொருளாதார நிலை உயர்வதில் சென்னை இராஜ்ய நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும், இதர நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், பெரும்பணி ஆற்றியுள்ளன என்பதை அறிய அரசாங்கம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறது."

அரசாங்கம் மகிழ்ச்சி அடைகிறதாம்! நெசவாளி, குமுறுகிறான், என்கதி என்ன ஆவது? நான் எங்கே போவேன்? என்று கேட்கிறான். அமைச்சரோ, மகிழ்ச்சி அடைகிறார்—அவ்வளவு நன்மை செய்தாகிவிட்டதாம் நெசவாளிக்கு!

அமைச்சரின் பேச்சு, ஏற்றுக்கொள்ளத் தக்கதுதானா? நெசவாளி, வேண்டுமென்று, வேதனைக்கிடம் பாடுகிறான்! நாம்தான் பார்க்கிறோமே, அவன், நாளுக்கு நாள் காய்ந்து, தேய்ந்து, உருமாறிப்போய்க் கொண்டிருக்கும்; உள்ளம் உலுக்கும் காட்சியை. மரக்கிளை, ஆழ்கிணறு, இவைகளை அல்லவா, அவன், அமைச்சர்களை நம்புவதைவிட அதிக ஆர்வத்துடன் நம்புகிறான். அவ்வப்போது இதழ்களில் காண்கிறோமே, இம்சைக்கு ஆளான நெசவாளி படும் அவதிகளை. அமைச்சரோ, எவ்வளவோ உதவிகள்! செய்த படி இருக்கிறோமே, இவ்வளவு செய்கிறோமே, என்று எங்களுக்கே மகிழ்ச்சி!!—என்கிறார்.

"நாட்டிலே 2-ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேறியுங்கூடக் கைத்தறியாளர்கள் சம்பந்தப்பட்டவரை, அவர்களது சொந்த வாழ்க்கையில் எவ்வித மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை. சுருங்கச் சொன்னால், அவர்களது வாங்கும் சக்தி குறைந்துபோய், அகவிலை உயர்வுடன் அன்றாடம் மல்லுக்கட்டி வருகிறார்களென்று கூறலாம்."

தம்பி! கைத்தறியாளர்களின் பாதுகாவலன் என்ற நிலையில் உள்ளவர்கள், இதுபோலக் கூறுகிறார்கள்; அமைச்சரோ, அகமகிழ்ச்சிகொள்கிறார்; அந்த அகமகிழ்ச்சியையும் சேர்த்து எடுத்துக்கொண்டுதான், அமெரிக்கா போயிருக்கிறார்.

யாரோ, வீணாகக் கண்ணீர் வடிக்கிறார்கள், கைத்தறியாளர்களைக் காட்டி; நிலைமை அது அல்ல. அமைச்சர் சொன்னதுபோல, அகமகிழத்தக்க அளவிலும் வகையிலும்தான் உதவி செய்கிறது சர்க்கார் என்று ஒட்டு கேட்கவரும் காங்கிரசார், கூறுவர்,

நெசவாளி கஷ்டப்படுகிறான், என்பதை மேலும் விளக்கமாகவே கூறுகிறார், பாதுகாவலர்.

"தொழிற்துறையில் அவர்களது ஆதார தேவையாகவுள்ள மூலப்பொருளான நூலுக்கு இன்று உயர்ந்துள்ள விலையானது, இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் மங்கம்மா மார்க்கட்டிலே விற்ற நூல் விலையைக் கேலிசெய்வதாக இருக்கிறது. கேள்விமுறையற்று உயர்ந்துவிட்ட நூல் விலை காரணமாகக், கைத்தறிநெசவாளர்கள் இன்று சொல்லொணாத் துன்ப துயரங்களுக்கு ஆளாகி நிற்கின்றனர்."

தடுத்து நிறுத்தவேண்டும்

"இரண்டாவது திட்ட காலத்தில் விலைவாசி உயர்வுபற்றி நாம் உண்மையில் கவலைதான் கொண்டிருக்கிறோம். விலை உயர்வு காரணமாக நமது மக்களுக்கு வாழ்க்கைக்கு அவசியமானவை பாதிக்கப்படுகின்றன. மேலும் சமீப காலத்தில் விலைவாசி உயர்வு மிகவும் அதிகமாகியிருக்கிறது; இவ்விதம் தொடர்ந்து விலைவாசிகள் உயர்ந்து வருவது நமக்கு நல்லதல்ல. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் திட்டமான நடவடிக்கை எடுத்தாக வேண்டும்"

என்று ரிசர்வ் பாங்க் கவர்னர் எச். வி. ஆர். அய்யங்கார் அவர்கள் 1—11—60-ல் சென்னையிலுள்ள சர்வதேச வளர்ச்சிச் சங்கத்தின் கிளையில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

மங்கம்மா மார்க்கட்டு விலையைவிட, அதிகமாமே இப்போது—ஏழை பங்காளர் ஆட்சியிலே—கவனித்தாயா தம்பி! இது நாட்டு மக்களுக்குத் தெரியாது—தெரிந்தாலும் உருட்டி மிரட்டி வாயை அடக்கிவிடலாம் என்ற துணிச்சலில்—கதராடைகளுக்கு, எவ்வளவு விருப்பு, கனைப்பு, முறைப்பு—பார்க்கிறாயல்லவா!

> "நூற்பாலை முதலாளிகளே தாங்களாக முன்வந்து நூலுக்கு விலைக்குறைவு செய்துவிட்டதாக அறிவித்து, அரசாங்கத்தையும் கைத்தறியாளர்களையும் ஒரு வகையாக ஏமாற்றியதைத் தவிர, உருப்படியான பலன் ஏதும் ஏற்படவில்லை. அப்படித்தான் நூல் விலையைக் குறைத்துவிட்டதாகச் சொன்னார்களே, அந்த விலைக்காவது மார்க்கெட்டில் நூல் கிடைக்கிறதா? இல்லையே! அதிலும் இப்போது கள்ளமார்க்கட்தானே!"

காங்கிரசாட்சி—கள்ளமார்க்கட்—இந்த இரண்டையும் எவ்வளவு ஜோடிப் பொருத்தத்தோடு, சேர்த்துப் பேசுகிறார்கள்! ஆனால், துளியாவது வெட்கம் காணோமே, ஆளவந்தார்களுக்கு!!

கைத்தறியாளருக்கு நூல் கிடைப்பதில்லை — கள்ளமார்க்கட்டை நாடுகிறான்—விலை ஏறுகிறது—மங்கம்மா மார்க்கட் விலையைவிட!

ஆனால், அமைச்சர்கள், 'நெசவாளி காலனி' திறப்புவிழா செய்யச் செல்கிறார்கள்—அதைத் திறப்பதற்காகத் திறக்கும் வாய், வலி எடுத்துப்போகும் அளவுக்கு, நமது கழகத்தைத் தூற்றிப்பேசப் பயன்படுத்திவிட்டு, இறுதியாக, எந்த நாட்டு அரசியல் தலைவனும் எடுத்தியம்பத் தெரியாமல் தத்தளிக்கும் அதி அற்புதமான அரசியல் தத்துவம் பேசுவதாக எண்ணிக்கொண்டு, 'வீணாக எதை எதையோ பேசுவானேன்—இப்போது வேண்டியது சோறு!—என்று தெளிவுரை தருகிறார்கள்.

இனி இந்தச் சோற்றுக்குக்கூட, காமராஜர் அதிகமாக வாய்திறக்க முடியாதுபோலிருக்கிறது—நேரு பண்டிதர், அரிசிச்சோறு சாப்பிட்டால், சோம்பேறிகள் ஆகிவிடுகிறார்கள் — மூளை கூடச் சரியாக இருக்காது!—என்று பேசுகிறார்.

இத்தகைய ஒரு விஞ்ஞான நுணுக்கம் நிரம்பிய (!!) கருத்தை வெளியிடுவதற்கு முன்பு, நேரு பண்டிதர், நன்கு ஆராய்ந்து பார்த்து, காமராஜர் போன்றாரிடம் கலந்து பேசித் தெரிந்துகொண்டுதான், வெளியிட்டிருப்பார். காமராஜர்களும், ஆமாமாம்! என்று தலை அசைத்திருக்கக்கூடும்.

கைத்தறியாளர்களுக்கு, காங்கிரஸ் ஒன்றுமே செய்யவில்லையா? ஏய்! கழகம்! உன்னைத்தான் கேட்கிறேன்! ரிபேட் கொடுப்பது, தெரியுமா? தெரியாதா? என்று கதருடையார் கோபத்துடன் கேட்கிறார்.

அமைச்சர்களோ, 'ரிபேட்' தருகிறோம்; இப்போது; ஆனால், டில்லி வேறு விதமாகப் பேசுகிறது; ரிபேட் தொடர்ந்து கிடைக்கும் என்று கூறுவதற்கு இல்லை, என்று, பேசுகிறார்கள்.

> "கைத்தறித்தொழிலுக்குத்தொடர்ந்து பாதுகாப்புத் தர இயலாது; ரிபேட்டுக்குப் பதிலாக மாற்று யோசனை இருந்தால் தெரிவியுங்கள் என முக்கிய அமைச்சர்களே பேசுகிறார்கள். இதே பல்லவியை கதர்த் தொழிலைப் பார்த்துமட்டும் சொல்ல அவர்களது நா கூசுகிறதே. ஏன்?
>
> சாதாரண காலத்தில் கைத்தறி ஜவுளிக்கு 5 காசு ரிபேட். இப்போது தீபாவளிக்காகக் கூடுதலாக 5 காசு சேர்த்து ரூபாய்க்கு 10 காசு ரிபேட் தர அனுமதித்துவிட்டு, அடுத்த பக்கம் கதர் ஜவுளிக்கு ரூபாய்க்கு 5 அணா—அதாவது 31 காசு ரிபேட் தருவதற்கு அனுமதிக்கிற நியாயம் எதில் உட்பட்டதோ தெரியவில்லை!"

தம்பி! இதைவிடத் தெளிவாக, கைத்தறியாளர் பிரச்சினையைக் கூற முடியாது.

நெசவாளியின் குமுறல், அமைச்சரின் அகமகிழ்ச்சி, மங்கம்மா மார்க்கட், கதருக்கு 5 அணா ரிபேட் என்ற, இவ்வளவும்பற்றி நான் இங்கு, கூறியிருப்பது, நெசவாளர்களின் பாதுகாவலனாகப் பணியாற்றும், "கைத்தறி," தீபாவளி மலரில் காணப்படும், கட்டுரைகள், தலையங்கம், இவற்றிலிருந்து, எடுக்கப்பட்டவை.

*

ஆக, ஆய்வுக் குழுவின் அறிக்கை, உழவர் படும் துயரத்தையும், நெசவாளர் படும் அல்லலை, 'கைத்தறி,' மலரும், நன்கு எடுத்துக் காட்டுகின்றன. உழவர்—நெசவாளர்—இவர்கள், சமுகத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள், இவர்களுக்குக் காங்கிரஸ் நடாத்தும் குடிஅரசு, கொடுத்திருப்பது இது; இனிக் குடிஅரசு முறை மீதே மக்களுக்குக் கசப்பு ஏற்படுவதில் வியப்பு என்ன?

அது சரி, அண்ணா! சென்ற கிழமை, வாக்களித்தாய், மன்னனைக் காணலாம் என்று; நானும் ஆவலாக வந்தேன்; நெசவாளியையும், உழவனையும் காட்டுகிறாயே!! — என்றுதானே, தம்பி! கேட்கிறாய்.

இவர்கள், எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்!!

முடிதரித்த மன்னனையே காணவேண்டுமா! சரி காட்டுகிறேன், அடுத்த கிழமை!

அண்ணன்,

அண்ணாதுரை

“வழிபாடு”

கனகு

அந்தப் பள்ளிக்குள் நுழையும் போதே, அது வைதிகர்களின் ஆட்சியில் நடைபெறுகின்ற பள்ளி என்பதைப் பறையறைந்து சொல்வனபோல் தென்பட்ட பல கோலங்களை அங்கு கண்டேன். அண்மையில் நடந்து முடிந்த வைதிகர்களின் கலைமகள் வழிபாட்டுச் சின்னங்கள் அங்கே கதவுகளின்மீதும், பலகணிகள்மீதும், மேசைகள், விசுப்பலகைகள், கரும்பலகைகள், படங்கள் ஆகியவற்றின்மீதும் மட்டுமல்ல, அந்தப் பள்ளியிலுள்ள பதிவுப் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள் முதலிய அனைத்திலும் வெறிக்கோலத்துடன் நிறைந்திருக்கக் கண்டேன். சுவர்களில் எல்லாம் கூடச் சந்தனக் குழம்பை வாரி இறைத்திருந்தார்கள்.

அந்தப் பள்ளியில் பல்வேறு மதத்தைச் சேர்ந்த குழந்தைகள் கல்வி பயில்கின்றனர் என்பதைப் பெயர்ப்பட்டியல் காட்டிற்று. அந்தப் பள்ளி தனிப்பட்ட மதத்துறையினரால் நடத்தப்படுவதொன்றும் அல்ல. அது ஊராட்சி மன்றத்தின் நிர்வாகத்தில் நடைபெறும் பொதுப்பள்ளி.

‘இவை எல்லாம் தலைமையாசிரியரின் வேலையாக இருக்குமோ’ என்று எண்ணினேன். ஆனால் அவர் அப்படி ஒன்றும் வைதிகச் சாயல் பிடித்தவர்போல் தென்படவில்லை. கள்ளங்கபடமில்லாத பார்வை, அப்பாவியைப்போன்ற தோற்றம், எதையும் சகித்துக் கொண்டு போகும் போக்கு, இவை அவரிடத்திலே தென்பட்டன போல் தோன்றின எனக்கு. அப்படிப்பட்ட சிலர் வைதிகராக இருப்பதும் உண்டல்லவா? — அதை எடுத்துக் காட்டச் சாமானிய வைதிகர் இட்டுக்கொள்ளும் சந்தனப்பொட்டுக்கூட அவர் நெற்றியிலே இல்லை. ‘ஒருவேளை அதுகூட இல்லாத வைதிகரோ அவர்?’

முதலில், பதிவுப் புத்தகங்களைப் புரட்டினேன். பிறகு ஒவ்வொரு வகுப்பாகப் பார்வையிட்டுக் கொண்டுவந்தேன்.

அந்தப்பள்ளியில் ஐந்து வகுப்புகள். ஆனால், ஆசிரியர்கள் நால்வர். அன்று அங்கு வந்திருந்தவர்கள் மூவர்தாம்.

“மற்றொரு ஆசிரியர் ஏன் வரவில்லை?” என்று தலைமை ஆசிரியரிடம் வினவினேன்.

“அவர் வந்து......” என்று எதையோ சொல்லத் தயங்குபவர் போல் திக்குமுக்காடினார் தலைமையாசிரியர். என்னிடம் ஏதோ சொல்ல விழைபவர்போல் தோன்றிய அவர், பெருங்குற்றம் ஒன்று செய்யப்போகின்றவர்போல் சுற்றுமுற்றும் அடிக்கடி பார்த்துக் கொண்டார். மற்ற இரண்டு ஆசிரியர்களும் ஒன்றுமே அறியாதவர்கள்போல் மேல்விட்டத்தை நோக்கிக்கொண்டிருந்தனர். என் கேள்வியை வலியுறுத்தவில்லை நான். “நீங்கள் உங்கள் வகுப்புகளுக்குப் போகலாம்!” என்று மற்ற ஆசிரியர்களிடம் கூறிவிட்டுத் தலைமை ஆசிரியரின் அறைக்குப்போனேன். ஆட்டுக்குட்டியைப்போல் தலைமையாசிரியர் என்னைப் பின்தொடர்ந்து வந்தார். நான் அமர்ந்தேன். சில குறிப்புகளை எழுதத் தொடங்கினேன். அந்தத் தலைமை ஆசிரியர் நின்றுகொண்டிருந்தார்.

“எல்லாம் இதனால் வந்தது தான்” என்று அங்கு மேசையில் சிந்தப்பட்டுக் காய்ந்து போய்க் கிடந்த சந்தனக் குழம்பைச் சுட்டிக் காட்டினார் தலைமையாசிரியர்.

“எதனால், எதற்கு?” என்று அவரிடம் வினவினேன்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

“இந்தச் சரசுவதி பூசை நடத்தினார்களே, இதனால் ஏற்பட்ட சச்சரவினால்தான், அவர்—அந்த மற்ற ஆசிரியர் இங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார். பாவம், பிள்ளை குட்டிக்காரர்.”

“இந்த விழாவுக்கே அவர்தான் காரணமோ?”

“ஒருவகையில் இல்லை. இன்னொரு வகையில் ஆமாம்”

“என்ன?—”

நிகழ்ந்தவற்றை முதலிலிருந்து அவர் சொல்லத் தொடங்கினார்.

“கடந்த நான்கு ஆண்டுகளாகச் செல்லத்துரை இங்கே பணியாற்றி வந்தார். நான் பெயரளவில்தான் தலைமை ஆசிரியன். இந்தப் பள்ளியில், எல்லாச் செய்திகளிலும் முன்னின்று, திறமையாகச் செயலாற்றி வந்தவர் அவர்தான். பாடம்சொல்லிக்கொடுப்பதில் எப்படி அவர் வல்லவரோ, அப்படித்தான் மற்ற மற்றச் செய்திகளுக்கும் நல்லவிளக்கங்கள் தருவதிலும் வல்லவர். வெறும் கிணற்றுத் தவளைகள் போல் தாம்உண்டு, தம் வகுப்பு உண்டு. தாம் நடத்தப்போகும்

பாடங்கட்கு வரையறுக்கப்பட்ட விளக்கங்கள் உண்டு என்று சிலர் வெறும் இயந்திரங்களைப்போல் இயங்கிவருகின்றார்களே, அவர்களுக்கு நேர்மாறானவர் இவர்.

சென்ற ஆண்டு இந்த ஊரில் இலக்கிய மன்றம் ஒன்று நிறுவப்பட்டது. அந்த மன்றத்தில் இங்குள்ள படித்த முற்போக்காளர்கள், கல்லூரி மாணவர்கள், ஆசிரியன்மார் முதலானோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். செல்லத்துரையும் ஒரு உறுப்பினர். பல்வேறு செய்திகள்பற்றி அங்கே பேசப்படுவதும், விளக்கங்கள் காணப்படுவதும் உண்டு. ஒரு தடவை 'கலைமகள் விழா' என்பது பற்றி அங்கே பேசப்பட்டது. அவ்வேளை அங்கு பேசியவர்களில் நடுநாயகமாக விளங்கியவர் நம்முடைய செல்லத்துரைதான். நான்கூட அன்று அங்கு போயிருந்தேன்—சும்மா வேடிக்கை பார்ப்பதற்கு. மாற்றுக் கருத்துள்ள—அதாவது மற்றவர்களின் நல்ல நோக்கத்தையும், நல்ல கருத்துக்களையும், தீய நோக்கும், தீயபோக்கும் உடையன என்று திரித்துக் கூறும் மனப்பாங்கு உடையோர்—இரண்டொருவரும் அங்கு வந்திருந்தனர். அவர்களில் இந்த ஊர் ஊராட்சிமன்றத் தலைவரின் மைத்துனரும் ஒருவர். பெயர் காத்தமுத்து.

காத்தமுத்துவைப்பற்றி இங்குள்ள எல்லாரும் நன்கறிவர். அவரை அவருடைய மைத்துனர்க்கே பிடிக்காது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இங்குள்ள எவருக்குமே அவரைப் பிடிக்காது—சிலரைத் தவிர. (இவ்வேளை அவர் சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்துவிட்டு, என் காதருகில் வந்து தணிவான குரலிற் கூறினார்) இங்கே கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்கள், வம்புதும்பு செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள், வேறு வேறு வகைகளில் நேர்மை இல்லாத போக்கினை உடையவர்கள் ஆகியோர் சிலர் இருக்கின்றனர்.

அப்படிப்பட்டோர்களால் போற்றப்படும் அந்தக் காத்தமுத்து அன்று இலக்கிய மன்றத்தில் வந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததுமே, ஏதேனும் கலவரமோ விபரீதமோ நிகழும் என்று நான் எதிர்பார்த்தேன்.

அந்த மன்றத்தில் கலவரம் செய்யும் துணிச்சல் காத்தமுத்துவிடம் இல்லை. செல்லத்துரை பேசும்போது பெட்டிப் பாம்பைப்போல் அவன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். "ஆண்டுதோறும், ஆண்டுதோறும் கலைமகள் விழா என்ற பெயரில் அர்த்தமில்லாத சாங்கியங்களைப் புரிகின்றார்கள், அறிவாராய்ச்சி இல்லாதவர்கள். அப்படி அவர்கள் செய்வதன் மூலம் இன்னும் இங்குள்ள மடைமையின் இருள் அகலவில்லை என்பதைத்தான் அவர்கள் காட்டிக்கொள்கிறார்கள். இதிலே ஒரு விந்தை என்னவென்றால், நன்றாகப் படித்தவர்கள், நம்மைப் பார்த்து 'அவர்களுக்கு என்ன தெரியும்?' என்று ஊரெங்கும் பேசித் திரிபவர்களே அப்படிச் செய்கின்றார்கள். அதுவும் வீம்புக்கென்றே, வேண்டுமென்றே இதுபோன்ற விழாக்களை ஆடம்பரத்தோடு ஆரவாரத்தோடு, அமர்க்களமாகச் செய்கின்றார்கள். அப்படி அவர்கள் செய்வதைப் பார்த்துவிட்டு, காலமெல்லாம் அறியாமைப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும்,—அதிலிருந்து விடுபட வழியறியாமல் திகைத்துத் தடுமாறிக் கொண்டிருக்கும் பாமரர்களும் அந்தப் பொருளற்ற விழாக்களை நடத்த விழைகிறார்கள். என்னே மடைமை! இதனை அறியாமை வெறி என்பதா? அல்லது அளவு மீறிய வீம்பினால் ஏற்பட்ட வெறி என்பதா? ஐயகோ, தெரிந்தும் திருந்தாமல் இப்படிச் சாக்கடையில் புரள்கின்றார்களே இவர்கள்! இவர்களைத் திருத்துவது எப்படி?' — இந்த முறையில் செல்லத்துரை நெடுநேரம் பேசி, 'உண்மையான கலைமகள் வழிபாடு, பல்வேறு வகைப்பட்ட கலைகளையும், தொழில்களையும் நம்மவர் அனைவரும் நன்கு கற்பதிலும், அவற்றிலே இன்று உலகில் முன்னேடியாகவுள்ள நாடுகளில் உள்ள திறமையாளர்களைப்போல் நம் சிறந்த திறமையை எடுத்துக்காட்டிச் செயல்படுவதிலும்தான் இருக்கின்றது. இந்த நாட்டிலுள்ள நல்லறிவு அந்த வகையில் ஆக்கம் பெறுமாறு செய்தால், அதுவே போதும். அதைவிடச் சிறந்த வழிபாடு பிறிதொன்றும் கிடையாது. அந்த ஒப்பற்ற வழிபாட்டை நாம் எல்லோரும் முனைந்து நடைமுறைக்குக்கொண்டு வரவேண்டும்" என்று சிறப்புற விளக்கிக்கூறினார்.

காத்தமுத்து சும்மா இருப்பானா? உடனே ஓடினான் ஊராட்சி மன்றத் தலைவரிடம். செல்லத்துரை என்ன என்ன கருத்துக்களிற் பேசினாரோ, அவற்றிற்கெல்லாம் முற்றும் மாறான, விபரீதமான கருத்துக்கள் கொள்ளும் வகையில் அவர் பேசியவற்றை எல்லாம் மிகைப்படுத்தியும், திரித்தும் விரித்துக் கூறினான். கடவுள் பூசை, கலைமகள் பூசை செய்வோரை எல்லாம் கண்டபடி—வாய்க்கு வந்தபடி திட்டியதாகவே எடுத்துக்கொண்டார் ஊராட்சி மன்றத் தலைவர். அன்றிலிருந்து, பள்ளிக்கூட நிர்வாகி என்ற முறையில் செல்லத்துரை மீது ஒரு கண் வைத்திருந்தார் அவர். தொடர்பில்லாத செய்திகள் பற்றி எல்லாம் அவர்மீது குற்றம் சுமத்தத் தொடங்கினார். செல்லத்துரையை அவர் தம் எதிரியாகவே எடுத்துக் கொண்டுவிட்டார். கண்மூடித்தனமான கொள்கையுடையவர்கள் ஒருவரை வெறுக்கவும், ஒதுக்கவுமான செயல்களில், ஈடுபட்டுவிட்டால், எவ்வளவு தீவிரமாகவும், பிடிவாதமாகவும் தாங்கள் மேற்கொண்டதை நடத்திச் செல்வார்கள் என்பதை நான் இந்த நிகழ்ச்சி மூலமாகத்தான் கண்கூடாகக் கண்டேன்.

ஒருபுறம் ஊராட்சிமன்றத் தலைவர் செல்லத்துரையை ஒடுக்க வேண்டுமென்ற முனைப்போடு கருவிக் கொண்டிருந்தார். பிறிதொருபுறம் அந்தக் காத்தமுத்து, தன்னுடைய சகாக்கள் மூலம் ஊரிலே கூட்டமே கூட்டிப், பொதுமேடையில் ஏறிச், செல்லத்துரைமீது வீண் பழிகளை எல்லாம் சுமத்திக், கண்டபடி வசைமாரிகளை வாரி இறைத்தான்.

இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், செல்லத்துரையை நல்லாசிரியன் என்று கூறிக்கொண்டிருந்த பொதுமக்கள் எனப்படுவோரில் சிலர்கூட—ஒரு வேளை ஊராட்சிமன்றத் தலைவரும், காத்தமுத்துவும் சொல்கின்ற செய்திகள் உண்மையோ என்ற அளவில் பேசத் தொடங்கியதோடு, குற்

புதுவை வாணன்
தீட்டிய
"சிற்பங்கள் சிரிக்கின்றன"
0—25-புதிய காசுகள்

"கடைசி முத்தம்"
0–25-புதிய காசுகள்

தேவைக்கு:—
கண்ணம்மாள் பதிப்பகம்
திருப்பாதிரிப்புலியூர், தெ. ஆ.

வாளியொருவனைப் பார்க்கும் கண்களோடு செல்லத்துரையைப் பார்க்கவும் தொடங்கினர்.

இவ்வாறு செல்லத்துரைமீது முற்றிக்கொண்டு வந்த பகைமையும், எதிர்ப்புணர்ச்சியும் இந்தச் சரசுவதி பூசையன்று உச்சக் கட்டத்தை அடைந்தது. வீம்புக்கென்றே இந்தப் பயனற்ற விழாவை விமரிசையாக நடத்த வேண்டுமென்று உத்தரவுபோட்டார் ஊராட்சிமன்றத் தலைவர்—பள்ளியின் நிர்வாகி என்ற முறையில், அதற்கெனச் செலவுக்காக ஊராட்சிமன்றத்திலிருந்துதொகையும் ஒதுக்கினர். எப்படியோ போகட்டும் என்று நானிருந்தேன். நடத்துவோர் நடத்தட்டும் என்று வாளா இருப்பதைத் தவிர, அதிகாரத் திமிர், ஆணவம் இவற்றின் எதிரில் என்போன்றவர்களால் என்னதான் செய்யமுடியும்? இட்டத் தட்டச் செல்லத்துரையும் என்னுடைய அந்த நிலைமைத்தான் பின்பற்றி வாளா இருந்தார். ஆனல்,

அந்த நிர்வாகி, ஊராட்சிமன்றத் தலைவர், செல்லத்துரையைச் சும்மா விடுபவராக இல்லை.

'இந்த விழாவை நீரேதான் நடத்திவைக்கவேண்டும்' என்று பிடிவாதமாகச்செல்லத்துரையிடம் வந்து சொன்னர்.

'நான் இதுவரை இப்படியொரு விழாவில் கலந்துகொண்டது கிடையாது. இனியும் கலந்துகொள்ளப்போவதில்லை. தயை கூர்ந்து நீங்களே அதனை நடத்திக்கொள்ளுங்கள்' என்று அமைதியான முறையில் மறுமொழி பகர்ந்தார் செல்லத்துரை.

'நான் சொல்கிறேன். நீர் மறுக்கின்றீரா? நான் யார் தெரியுமா?—கண்டிப்பாக இதனை நீர்தான் நடத்தவேண்டும். ஒரு பள்ளி ஆசிரியராகிய நீர், பள்ளியின் பொது விழாவில் கலந்துகொள்வதற்கேமறுக்கின்றீரென்றால்,வேறு என்ன வகையில்தான் நீர் பள்ளியிற் சரியானபடி பணியாற்றப் போகிறீர்?' என்று அவர் மிரட்டத் தொடங்கினர். அவ்வேளை எனக்கு நடுக்கமே ஏற்பட்டுவிட்டது. எப்படி இருந்தாலும், நாம் சாமானிய ஆசிரியர்கள். அவர்கள் உயர் நிலையிலிருக்கும் நிர்வாகிகள். எது வேண்டுமானாலும் — நல்லவற்றை இல்லாவிட்டாலும், தீயவற்றை அவர்களால் செய்யமுடியும். நாம் அஞ்சாமல் இருக்கமுடியுமா? ஆனல், செல்லத்துரை விட்டுக்கொடுப்போராய், இணங்கிவிடுவோராய் இல்லை.

"இது பள்ளியின் பொதுவிழா அல்ல. ஏனென்றால், இது எல்லாராலும், ஏற்றுக்கொள்ளப்படுர், நடத்தப்படும் விழா அல்ல. நான் இதில் கலந்துகொள்ளவில்லை என்றால், அதற்காக என்மீது நீங்கள் குற்றம் சுமத்த முடியாது, அது ஒருபுறமிருக்க, இந்த விழாவையே நான் எதிர்க்கிறேன். இந்த விழா நடத்துவதன்மூலம் இங்குள்ள மாணவர்கள் பெறப்போகும் நன்மை எதுவுமே இல்லை; பெறப்போகும் அறிவு ஒன்றும் இல்லை. அறிவு வளர்ச்சி பெறவந்த மாணவர்க்கு இதுபோன்ற பொருளற்ற விழாக்களால் நாம் மடைமையைத்தான் கற்றுக்கொடுக்கிறோம்.

ஆகவே, நான் சொல்லுகிறேன் —எல்லாருடைய நன்மையையும் முன்வைத்து, கருத்திற்கொண்டு --இதுபோன்ற விழாக்களைப்பள்ளிகளில் நடத்தவேண்டாம் என்று. நீ என்ன சொல்வது, நாங்கள் என்னகேட்பது என்ற முறையில் இதனை நீங்கள் நடத்திக்கொண்டுதான் போகவேண்டுமானல், தாராளமாக நடத்திக்கொண்டு போங்கள். காலம்வரும். அதுவும் மிகவுவிரைவில் வரும். அப்போது வடலூர் இராமலிங்க அடிகள் கூறியதுபோல் இந்தக் கண்மூடி விழாக்கள் எல்லாம் சிந்துவார் இல்லாமல் மண்மூடிப் போய்விடும்.''

'மிகவும் வாய்க்கொழுப்போடு பேசுகின்றீரே! தெய்வத்தை வழிபடுவதற்குக் கற்றுத்தரவேண்டிய ஆசிரியன்,தெய்வத்தை இகழ்ந்தா பேசுகின்றீர்! நீ ஆசிரியனுகப் பணியாற்றவே தகுதி இல்லை' என்று மரியாதைக் குறைவாகவே இழித்துப் பேசத் தொடங்கினர் அந்த நிர்வாகி.

'நீங்கள் ஆத்திரப்பட்டுப் பேசுகின்றீர்கள். ஆத்திரத்தால் உண்மையை உணர்ந்து கொள்ள முடியாது. இந்த வேளையில், எது தெய்வம், எது தெய்வ நிந்தனை என்று விளக்கம் சொல்லிக்கொண்டிருக்க நானும் விரும்பவில்லை. இப்போதைக்கு என்வரையில் இந்த விழாவில் கலந்துகொள்ள முடியாது'' என்று கூறிவிட்டுச் செல்லத்துரை வெளியேறிவிட்டார்.

''அவ்வேளை காத்தமுத்துவும் அங்கு வந்துவிட்டான். செல்லத்துரையை எப்படி எப்படியெல்லாம் தூற்றமுடியுமோ, இகழமுடியுமோ, அப்படியெல்லாம் இகழ்ந்துதூற்றி இழித்துப்பழித்துப் பேசிக்கொண்டே இருந்தார்கள் அவர்கள் இருவரும். அந்தச் சமயம் அவர்கள் அதிகாரத்தை எல்லாம் என்மீது காட்டினர்கள். அன்று பள்ளியே ஒரு அமளிக்கோலம் பூண்டது. ஆர்ப்பாட்டம் தாங்க முடியவில்லை. வீம்புக்கு நடத்தப்படும் விழாதானே!

அன்றே செல்லத்துரையை வேலையிலிருந்து நீக்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டார்கள். வகுப்பில் சரியாகப் பாடம் சொல்லித் தருவதில்லை. பிள்ளைகளைக் கெடுக்கிறார். தெய்வ நிந்தனை செய்கிறார். வகுப்புக்கும் சரியாக வருவதில்லை' என்று, கூலிக்குக் கையெழுத்துப் போடும் சிலரைக் கொண்டு முறையீடுகள் தயாரிக்கச்செய்து சம்மந்தப்பட்டவர்களுக்கு உடனே அனுப்பியதோடு, தாமும் தம் அதிகாரத்தைப் பயன்டுத்தி அவரை நீக்கிவிட்டார் நிர்வாகி.

நான் மேலே ஒன்றும் கேட்கவில்லை. பாவம், அந்தத் தலைமை ஆசிரியர் தம் அலுவலைக் காப்பாற்றிக் கொள்ள அந்தக் கயவர்களிடம் இன்னும் எப்படி எப்படி எல்லாம் தாழ்ந்து பணிந்து, வாயடக்கி மூச்சடக்கிச் செயல்புரிய வேண்டியிருக்குமோ! வழிபாடு — அதிலும் தெய்வ வழிபாடு என்ற பெயரால் சில எத்தர்கள் செய்து வைத்து அதன் வாயிலாகப் பிழைப்பு நடத்தும் தகாத போக்கினை—அன்றே, அந்தக் கொடுமை தொடங்கப்பட்ட காலத்திலேயே சிவவாக்கியரும், கபிலரும், பட்டினத்தாரும், தாயுமானரும், இராமலிங்க அடிகளும், இப்போது காந்தியடிகள் போன்ற உத்தமர்களும் எந்த அளவுக்குக் கண்டித்து, வெறுத்துள்ளனர் எனபதை அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் மூலம் தெள்ளத் தெளிய அறியக் கிடக்கின்றது. என்றாலும், அதிகாரம் ஆணவத்தைத் துணைக்கழைத்து வைத்துக்கொண்டு அறியாமையை நீரூற்றி வளர்க்கின்ற கொடுமை ஒழிந்து, நாடு நல்ல முறையில் இயங்க இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ, யார் கண்டார்கள்!!

★

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15, இல்லம் ...118

4-ம் பக்கத் தொடர்ச்சி

அந்தக் காட்சி அவனது மனத்திரையில் மீண்டும் திரும்பிற்று. பெருமூச்சு விட்டபடி திரும்பினான்.

தன்னுடைய பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்தப் பெரிய மனிதரின் கைவிரல்களில் மோதிரங்கள் பளிச்சிட்டன. அவரை ஒருமுறை நோட்டம்விட்டான். வயது சுமார் ஐம்பதுக்கு மேற்பட்டிருக்கும். மெல்லிய மல் ஜிப்பாவும், 'பின்லே' வேட்டியும், கால்களில் அணிந்திருந்த செருப்புகளும் செல்வக் கொழிப்பினைக் காட்டிற்று. ஜிப்பாவின் பைகளில் அடைபட்டுக் கிடந்த கறுத்த "மணிப்பர்ஸ்" அவன் ஏக்கம் சூழ்ந்த விழிகளில் பட்டது. உள்ளமும் பரபரத்தது.

பார்வையை மீண்டும் வான வெளிக்குத் திருப்பினான். மனது எதையெதையோ எண்ண ஆரம்பித்தது. அவனுள் உறங்கிக் கிடந்த மனச்சாட்சி எளம்ப ஆரம்பித்தது.

"இந்த மணிப்பர்சைத் திருடி விட்டால் என்ன?"

"ஏடா! உனக்கேன் இந்த எண்ணம். படித்தவனாயிற்றே! பண்பினை இழக்கலாமா?"

மனம் கேட்டது அவனை.

"ஆமாம்—படித்துக் கெட்டேன். பாழும் படிப்பினை நம்பியதைவிட, இந்த உடம்பை வளைத்து ஏதாவது வேலை செய்திருந்தாலும் என்னை நம்பியவர்களின் வயிற்றைக் கழுவி இருக்கலாம் — எத்தனை ஆசையுடன் அம்மா என்னை அனுப்பினாள்? சென்னை செல்கிறான் மகன் வேலைதேடி — நல்ல விதமாய் வேலையுடன், மகிழ்ச்சிச் செய்தியுடன் வருவான் என்றெல்லாம் எண்ணி, வீட்டில் உறங்கிக் கிடந்த, பித்தளைச்சாமானை விற்று அந்தப் பணத்தைக் கொடுத்து அனுப்பினாளே, அவள் முகத்தில் எவ்வாறு விழிப்பேன்..."

"அதற்காக — நீ திருட்டுத் தொழிலை இன்றிலிருந்து ஆரம்பித்து; உன தாயிடம் வேலை கிடைத்துவிட்டது என்று கூறப் போகிறாயா—உன் தாயும் அதைத் தெரிந்து பெருமைப்படுவாளோ?"

"தாய்க்குத் தெரிந்தால்தானே; இன்னும் சில மாதங்களில் வேலை கிடைத்துவிடும் என்றுசமாதானப் படுத்தினால் போதுமே"

"உன் மனச்சாட்சியாகிய நான் வாளா இருப்பேனா?"

"ஆமாம்—பெரிய மனச்சாட்சி—மனச்சாட்சியைப் பார்த்துக் கொண்டு அதன்படியே நடந்து சீமானானவர் உலகில் எவருண்டு?"

"இழிவானமுறையில் நாய்கூடப் பிழைக்கும்..."

"ஆம்... அந்த நாய்களில்கூட ஒருசில எச்சில் இலைகளைத்தின்று உடம்பை வளர்க்கிறது. மற்றொன்று விலையுயர்ந்த கார்களில் செல்லுகின்றது"

"அதற்காக—இன்று நீ எதையும் செய்ய முயன்றுவிட்டாயா?"

"மனச்சாட்சியே! உனக்கு நல்லவர்களை வாட்டத்தான் தெரியுமே தவிர, வல்லவர்களை வருத்த இயலாது. உன்னை நம்பியதால் எவர் பயன் பெற்றார்?... கதறினேன்—கெஞ்சினேன் — என்னை நம்பிய உயிர்களின் வயிறு காயாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது என் பொறுப்பல்லவா? அவர்களை நாதியின்றி, அவர்கள் பசியைத் தணிக்க முயலாது வாழ்வதில் என்ன பயன்?"

'ஈன்றாள் பசிகாண்பாளாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்பது குறள் காட்டும் உண்மை நெறி. மனச்சாட்சி அவனை மடக்க எண்ணிற்று.

"அதே குறளில்கூட 'பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லை' என்றிருக்கிறதே, அதை எண்ணினாயா? இளம்பிள்ளைகளைக்காக்க, விதவையான என் தாய் எப்படியெல்லாம் வாழ்வை நடத்தி என்னைவளர்த்து விட்டாள். அவள் தாங்கிவரும் பாரத்தைச் சுமப்பது என் கடனல்லவா? தமிழகத்தின் தலைநகருக்குச் செல்கிறான் அண்ணன், மீண்டு வருகையில் பழங்களும் பொம்மைகளும் கிடைக்கும், வயிறார உண்ணலாம், விளையாடலாம்என்று எண்ணிக் கொண்டிருக்கும் என் தம்பி தங்கைகளை ஏமாற்றுவதா? முடியாது... என்றால் முடியாது...... பாழும் மனமே! ஒழிந்துவிடு, நல்லவர்களை, வாழ்வதற்கு வழி தெரியாதவர்களை விரட்டாதே... போ..."

அவனுக்குள் நடந்த போராட்டத்தில் அவன் வெற்றி பெற்றான். மனச்சாட்சி ஒதுங்கிவிட்டது. மெள்ள அவன் முகத்தைத் துடைத்துக்கொண்டபின், வண்டி கோடம்பாக்கத்தைவிட்டுக் கிளம்பிற்று. வண்டியில் சற்றுக் கூட்டம் குறைந்தது. பெரிய மனிதர் பத்திரிகைஉலகிலாழ்ந்துகிடந்தார். இல்லை கோழித்தூக்கம் போட்டபடி கையில் விரித்த பத்திரிகையுடன் அசைந்தாடிக்கொண்டிருந்தார்.

'பர்ஸ்' இளைஞனின் கண்களை இழுத்தது. இரத்த ஓட்டம் துடித்தது வேகமாக. எவ்வாறோ வெகு இலாவகமாக, பிறர் அறியாவண்ணம் பர்ஸை எடுத்துக்கொண்டான்—அவன் பையில் பர்ஸ் அடங்கிவிட்டது. துடிப்பும் அடங்கிற்று—உள்ளம் செய்யத்தகாத ஒன்றினைச் செய்துவிட்டதாகத் துடித்தது. இதயம் படபடவெனத் துடிக்க ஆரம்பித்தது.

"எப்படியும் அடுத்த புகைவண்டி நிலையத்தில் இறங்கி மறைந்துவிடவேண்டு" மென்று எண்ணி, வண்டியின் வாயிற்புறத்தருகில் வந்து நின்றான் — உடல் வியர்த்தது-கைகளில் சற்று நடுக்கம்.

இதற்குள்,

"ஐயோ... திருடன்...திருடன்... என் மணிபர்சைக் காணவில்லையே..." என்ற குரல்.

அந்த இளைஞன் சட்டென்று இடதுபுறமாகக் கூட்டத்தை விலக்கியவாறு வெளியே குதித்தான். வாயிற்புறத்தில் நின்றிருந்தவர்கள் 'ஐயோ'வெனக் கதறிப் பின்புறம் நகர்ந்தனர். இடப்பக்கம் விரைந்து வந்துகொண்டிருந்த தூத்துக்குடித்துரிதவண்டி, இளைஞனைத் துண்டாக்கி இரத்த வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டுப், பெருத்த ஓசையுடன் நின்றது.

❋

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.